பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 30 புதன்கிழமை 15.09.2021 கதிர் 314

**இது ரகசியம் அல்ல!**

முன்னாள் இராணுவ அதிகாரி இன்று ஜனாதிபதி. போதாக் குறைக்கு சிவில் நிர்வாகத்தையே இராணுவப் பாணிக்கு அவர் மாற்றி வருகின்றார்.

அதனால் நாட்டின் நிர்வாக முறையே இராணுவ 'டிஸிபிளினில்' (ஒழுங்கில்)

பக்கம்02 »

# அ'புரம் சிறைக்குள் துப்பாக்கியுடன் சென்ற லொஹான் அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து அராஜகம்



## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய முன்னணி கண்டனம்; இராஜாங்க அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்குமாறும் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் மதுபோதையில் கைத்துப்பாக்கியுடன் சென்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அங்கு தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட செய்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்தலை விடுத்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அராஜகமான இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி விசாரணையின்

☞ 10

# இலங்கையில் தொடரும் அத்துமீறல்கள்; இணை அனுசரணை நாடுகள் கவலை!

## ஜெனிவாவில் நேற்று தெரிவிப்பு

ஜெனிவா, செப்டெம்பர் 15

இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைவரங்களின் முன்னேற்றங்கள், பொறுப்புக்கூறல் விடயம், பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்து செயற் படுத்தப்படுதல், சிவில் சமூக இடைவெளியில் அதிகரித்துள்ள நெருக்குவாரங்கள் ஆகியவை தொடர்பில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விடயத்தைக் கையாளும் இணை அனுசரணை நாடுகள் நேற்று கவலை வெளியிட்டுள்ளன. கனடா, ஜேர்மனி, வடக்கு மசிடோனியா, மலாவி, மொண்ரிநீக்ரோ, இங்கிலாந்து ஆகிய ஆறு இணை அனுசரணை நாடுகளே ஜெனிவாவில் நேற்று இலங்கை விடயம் தொடர்பில் இந்தக் கவலையை வெளியிட்டுள்ளன.

இணை அனுசரணை நாடுகளின் சார்பில் ஜெனிவாவுக்கான இங்கிலாந்துத் தூதுவர் சைமன் மான்லி ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விடயம் தொடர்பாக உரையாற்றினார்.

☞ 2



## வெளியகத் தலைமீடுகளை நிராகரிக்கும்

# இலங்கை அரசின் முடிவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கவலை



ஐ.நா. கட்டமைப்பை நிராகரிக்கும் இலங்கை அரசின் தீர்மானத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46/1 தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வெளியகத் தலையீடுகளை நிராகரிப்பதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் 48ஆவது அமர்வில் நேற்று உரையாற்றும்போது குறிப்பிட்டிருந்தார்.

☞ 2

# வவுனியாவில் 11 பேரை பலியெடுத்த கொரோனா

## 104 வயது மூதாட்டியும் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் 104 வயது மூதாட்டி உட்பட மேலும் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 11 பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்நிலையில், மரணித்த 11 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை

☞ 2

## வவுனியாவில் மேலும் 91 பேருக்குத் தொற்று!

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 91 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில்

☞ 10

# கப்ராலின் நியமனத்துக்கு எதிராக நீதிமன்றில் மனு!

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு இடைக்கால தடைவிதிக்கக் கோரி, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களின் முன்னாள் ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் நேற்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார்.

☞ 2

## கொடிகாமம் விபத்தில் இளைஞர் ஒருவர் சாவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தென்மராட்சி, கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிளில் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம், இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த ராஜன் சிந்துஜன்

☞ 2

## O/L பரீட்சை பெறுபேறு விரைவில்

2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை விரைவாக வெளியிடத் தேவையான நடவடிக்கைகள்

☞ 2

# மேலும் 136 பேர் சாவு மொத்தக் காவு 11,567

இலங்கையில் மேலும் 136 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 567 ஆக அதிகரித்துள்ளது.


நேற்றுமுன்தினம் உயிரிழந்த 136 பேரில் 60

☞ 2

# இலங்கையில் நேற்று 2,473 பேருக்கு தொற்று

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 473 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

☞ 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடக்கும் என சிலர் பீற்றிக் கொள்கின்றனர்.

ஆனால் யுத்த காலத்திலும், பின்னரும் தமிழர் பிரதேசத்தில் 'இன்டிஸிபிளீன்' (ஒழுங்குமுறையற்று) எப்படி இலங்கை இராணுவம் செயற்பட்டதோ அது போலத்தான் அவரின் சிவில் நிர்வாகமும் இப்போது நடக்கின்றது என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

ஓர் அமைச்சர், குடித்து விட்டு கலாட்டா பண்ணுவதில் பெயர் எடுத்தவர். வரிசையாகப் பல சம்பவங்கள். அவர் வேறு யாருமல்லர், சிறை மறுசீரமைப்புக்கான அமைச்சர் லொஹான் ரத்வத்தைதான். இவரின் தந்தையாரை உங்களுக்குத் தெரிந்திருக்கும். சந்திரிகாவின் காலத்தில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்த அநுருத்தை ரத்வத்தைதான். மகனின் அத்துமீறல்கள் அனந்தம்.

அண்மையில் கூட அநுராதபுரம், பாகொடவில் ருவன் வெலிசாயாவில் நடைபெற்ற – அவருடன் தொடர்புபட்ட – ஒரு சம்பவத்தை நான் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன். மகா தூபி எனப்படும் ருவன் வெலிசாயாவில்தான் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் கோட்டாபய ராஜபக்ஷ. அந்தத் தூபிப் பகுதிக்குக் குடித்து விட்டு வாகனத்தில் நள்ளிரவு வேளையில் போய், இறங்கி உள்ளே செல்வதற்கு அனுமதிக்கும்படி கலாட்டா பண்ணியிருக்கின்றார் இந்த அமைச்சர். அது பெரிய செய்தியாகத் தெற்கில் அடிபட்டது. நானும் விலாவாரியாக எழுதியிருந்தேன்.

கடந்த 12ஆம் திகதி நன்றாக 'ஏற்றி'க் கொண்டு கொழும்பிலிருந்து ஹெலிக்கொப்டரைப் பயன்படுத்தி அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றிருக்கின்றார். அங்கு சில கைதிகளை தனக்கு முன்னால் முட்டிபோட்டு முழங்காலில் நிற்கும்படி பணித்திருக்கின்றார். அதற்கு மறுத்த கைதிகள் இருவருக்கு நெற்றிப் பொட்டில் பிஸ்டலை வைத்து மிரட்டியிக்கின்றார். அங்கு இவர் பண்ணிய களேபரம் குறித்து எதிரணி எம்.பியான றோஹண பண்டார ஊடகங்களுக்கு அம்பலப்படுத்தியிருக்கின்றார். இதில் முக்கிய விடயம் என்னவென்றால் இரண்டு தமிழ் அரசியல் கைதிகளே இவ்வாறு அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

அடுத்த நாள் 13ஆம் திகதியும் முன்னிரவு வேளை நன்றாக 'ஏற்றி'க் கொண்டு வெலிக் கடைச் சிறைக்கு தமது சகாக்கள் சிலருடன் போய் இறங்கி, அங்கும் அட்டகாசம் பண்ணியிருக்கின்றார். அவருடன் சென்ற நான்கு, ஐந்து பேர் கொண்ட இளம் பட்டாளத்தில் ஒருவர் அழகு ராணி என்றும் கூறப்படுகின்றது.

தமிழ் சகாக்களுக்கு தமது 'கலர்ஸ்' காட்ட அவர் இப்படி எகத்தாளம் பண்ணினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி உடனடியாக விசாரிக்கும் படியும், சிறைச்சாலையைச் சூழவிருக்கும் சி.சி.ரி.வி. கமராக்களின் பதிவுகள் அழிக்கப்பட முன்னர் அவற்றை நீதிமன்ற கண்காணிப்புக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கோரியுள்ளார்.

சாதாரண பிரஜை ஒருவர் இப்படி நடந்திருப்பாரானல் அவர் கைது செய்யப்பட்டு இப்போது விளக்க மறியலில் இருப்பார், ஆனால் இவர் மேலிடத்து ஆள் என்பதால் தொடர்ந்து அட்டகாசம் புரிய அனுமதிக்கப்பட்டிருக்கின்றார் என விசனத்துடன் சுட்டிக் காட்டியுள்ளார் அம்பிகா சற்குணநாதன்.

இந்த விடயத்தை நான் விளக்கமாக – விவரமாக – எழுதினாலும் கூட எனக்கும் ஏதும் விபரீதம் இதனால் நடந்தாலும் நடக்கக் கூடும்.

பொதுத் தேர்தல் ஒன்றின் போது கண்டி உடத்தலவின்னவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கின் பிரதான சூத்திரதாரிகள் ஒருவாறு நீதியின் பிடியிலிருந்து தப்பிக் கொண்டமை வாசகர்களுக்குத் தெரியும். தந்தை அநுருத்தை ரத்வத்தை, இந்த லொஹான் ரத்வத்தை, அவரின் சகோதரர் ஆகியோர் வழக்கில் கடைசியில் தப்பிக் கொண்டனர்.

அதேபோல, பப்புவா நியூகினிய தீவில் அழகி ஒருவரின் காதலரான இளம் றக்பி விளையாட்டு வீரர் ஒருவர் அங்கு படுகொலை செய்யப்பட்டார்.

அந்தச் சம்பவங்களில் எல்லாம் நீதியின் பிடியில் சிக்காமல் தப்பியவரின் கைகளில் நீதித்துறையின் கீழ் இயங்கும் சிறைகளைக் கண்காணித்து மறுசீரமைக்கும் பொறுப்பு வழங்கப்பட்டிருக்குமானால் இப்படி எல்லாம் விபரீதம் நடக்கத்தான் செய்யும்.

இந்த உண்மைகளை சற்றுத் துணிச்சலாக – சாடைமாடையாகத் தன்னும் – வெளிப்படுத்தும் எம் போன்ற ஊடகவியலாளர்களுக்கு உடத்தலவின்னவில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு ஏற்பட்ட கதி நேர்ந்தாலும் நேரலாம்.

ஏனென்றால், இதுதான் தன்னை ஒழுக்கமிக்க இராணுவ அதிகாரி போல வேடம் போடும் ஜனாதிபதியின் 'டிஸிபிளின்' அணியின் சீத்துவம்...!

பாவம், இலங்கை மக்கள், இவர்கள் கைகளில் ஆட்சி அதிகாரம் சிக்கிக் கிடக்கின்றமையால்...!

– மின்னல் –

## இலங்கையில் தொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் அங்கு கூறியவை வருமாறு:

ஒரு விரிவான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். நல்லிணக்க முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றின் தொடர்ச்சியான வேலைகளை உறுதி செய்வதற்கும் இலங்கை அறிவித்துள்ள உறுதிப்பாடுகளை நாங்கள் தொடர்ந்து கண்காணிக்கின்றோம்.

இந்த நிறுவனங்களின் அரசியல் சுதந்திரத்தை உறுதி செய்யுமாறு நாங்கள் இலங்கை அரசை வேண்டுகின்றோம். சில முக்கியமான வழக்குகளில் பொறுப்புக்கூறலில் செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட முன்னேற்றம் கூட பின்னடைவு அடைந்ததால் நாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

குறிப்பாக 2008 – 2009ஆம் ஆண்டில் 11 இளைஞர்கள் காணாமல்போனது தொடர்பான வழக்கின் சமீபத்திய நகர்வுகள் கவலை அளிக்கின்றன.

தற்போதைய மனித உரிமை நிலைவரங்கள், குறிப்பாக சிவில் சமூகக் குழுக்கள் மீதான கண்காணிப்பு மற்றும் மிரட்டல், பத்திரிக்கையாளர்களை மிரட்டுதல் மற்றும் அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்பவர்களுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகள் உள்ளிட்ட குடிமக்களுக்கு எதிராக அதிக கட்டுப்பாட்டு வரம்புகள் விதிக்கப்படுகின்றமை குறித்து நாங்கள் மிகவும் கவலைப்படுகின்றோம்.

சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் செயல்படும் சூழலை வழங்குவதன் முக்கியத்துவத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

பொலிஸ் காவலில் நடக்கும் இறப்புகள் குறித்து சுயாதீனமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைகளுக்கான – 47 ஆவது அமர்வில் நாங்கள் முன்வைத்த எங்கள் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சீர்திருத்துவது தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசு காட்டிய அணுகுமுறை வரவேற்கத்தக்கது. இருப்பினும் இந்தச் சட்டம் பற்றிய நமது நீண்டகால கவலைகள் இன்னும் உள்ளன. இலங்கை அரசை அதன் சர்வதேச மனித உரிமை கடமைகளுக்கு ஏற்ப பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மாற்றியமைக்குமாறு நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதித்துறை மேற்பார்வை இல்லாமல் புனர்வாழ்வு செயல்முறையை அறிமுகப்படுத்துவதற்கான அவர்களின் நோக்கத்தை மறுபரிசீலனை செய்யுமாறு இலங்கை அரசை நாங்கள் வேண்டுகின்றோம்.

இந்தச் சூழலில் மனித உரிமை வழக்கறிஞர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் கவிஞரும் ஆசிரியருமான அஹ்னாஃப் ஜசீம் ஆகியோரைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருப்பது குறித்து நாங்கள் கவலைப்படுகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடன் முழுமையாக ஒத்துழைக்குமாறு நாங்கள் இலங்கைக்கு அழைப்பு விடுக்கின்றோம். மற்றும் தீர்மானம் 46/1 ஐ செயற்படுத்துவதில் அரசுக்கு ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றோம் – என்றார்.

## வவுனியாவில் 11...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுத்துள்ளனர்.

வவுனியா, மூனாமடு கிராமத்தைச் சேர்ந்த குறித்த 104 வயது கதிரவேல் அமிர்தம் என்ற மூதாட்டியே மரணமடைந்தவராவார். வவுனியாவில் அதிகூடிய வயதில் மரணித்த முதலாவது வயோதிபராக இவரே கணிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (100)

## மேலும் 136 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெண்களும், 76 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் என இருவர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். 15 ஆண்கள், 13 பெண்கள் என 28 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 106 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 60 ஆண்களும், 46 பெண்களும் அடங்குகின்றனர்.

## இலங்கை அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில், ஐ.நா. 46/1 தீர்மானத்துக்கு அமைய இலங்கை நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை விடயத்தில் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.

காணாமல்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் திறம்படச் செயற்படுவதை இலங்கை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை போன்றவற்றில் இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி அனிடா பிபான் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளப்படுவதன் முக்கியத்துவத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

## O/L பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளைத் துரிதமாக வெளியிட கல்வி அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கொடிகாமம் விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

(வயது 24) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இயற்றாலைப் பகுதியில் நேற்றிரவு 09.30 மணியளவில் குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது , மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இலங்கையில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 90 ஆயிரத்து 955 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,354 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 15 ஆயிரத்து 649 ஆக உயர்வடைந்துள்ளது.

## கப்ராலின் நியமன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிணை முறி மோசடி வழக்கு தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் பரிந்துரையின் பேரில் அஜித் நிவாட் கப்ராலின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யுமாறு சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கும்படி மனுவில் கோரப்பட்டுள்ளது.


மனுவில், பிணை முறி மோசடி தொடர்பாக ஆராய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழுவை நியமித்தார் எனவும், அதன் அறிக்கையில் அஜித் நிவாட் கப்ரால் தொடர்பாக பல உண்மைகளை வெளிப்படுத்தப்பட்டிருந்தன எனவும் கூறப்பட்டது.

விசாரணை அறிக்கையின் வெளிப்பாடுகளில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்றும், அவர் மீண்டும் ஆளுநராக நியமிக்கப்பட்டால் மத்திய வங்கியிலுள்ள சான்றுகள் அழிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

விசாரணை அறிக்கையில் அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள அஜித் நிவாட் கப்ரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட வேண்டும். மேலும் நிதி சட்டத்தின் பிரிவு 12 இன்படி அஜித் நிவாட் கப்ரால் எந்தப் பதவிக்கும் நியமிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.



# யாழில் ஊரடங்கு வேளையில் இடம்பெறும் பௌத்த மயமாக்கல் பிள்ளையார் குளத்தைச் சுற்றி பௌத்த வர்ணங்களில் நிறப்பூச்சு





யாழ். பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில் உள்ள மாநகர சபைக்குச் சொந்தமான பிள்ளையார் குளத்தைச் சுற்றி பௌத்தக் கொடிகளில் காணப்படும் வர்ணங்களை ஒத்த வகையில் நிறம் தீட்டும் செயற்பாடு இடம்பெற்று வருகிறது.

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்ற இக்குளத்தின் சுற்று கம்பங்களுக்கு இவ்வாறு பௌத்தக் கொடிகளில் உள்ள நிறங்களை பொறிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

1996 ஆம் ஆண்டு 1.51(0.6063) ஏக்கராக இருந்த குளத்தின் பரப்பளவு 2013 ஆண்டு மீள அளக்கப்பட்ட நிலையில்1.26(0.5078) ஏக்கராக குறைவடைந்துள்ளது.

இவ்வாறான நிலையில் குறித்த குளம் தற்போது புனரமைக்கும் போது குளத்திலிருந்து தூர்வாரப்பட்ட மண்ணை மீண்டும் குளத்தின் சுற்றுப்புறங்களில் கொட்டியதாக குற்றச்சாட்டுகளும் எழுந்தன.

இன் நிலையில் யாழ்மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்திகள் தொடர்பில் கள ஆய்வுகளை மேற் கொள்வதற்காக கடந்த வாரம் அமைச்சர் நாமல் ராஜ பக்ஷ குறித்த பகுதிக்கு விஜயம் செய்திருந்தார்.

இவ்வாறான நிலையில் அவர் பார்வையிட்டுச் சென்ற நிலையில் இவ்வாறு இடம்பெறுவது பலருக்கும் சந்தே கங்களை ஏற்படுத்துகிறது.

# குளத்தின் சுற்றுவட்டத்துக்கு வர்ணம் தீட்டும் பணி நிறுத்தம்

## யாழ் முதல்வர் பணிப்புரை



யாழ் மாநகர சபைக்குட்பட்ட பிள்ளையார் குளத் தின் சுற்றுவட்டத்துக்கு தீட்டப்பட்ட வர்ணம் தொடர்பில் எழுந்த சர்ச்சைகளால் அதன் பணிகளை நிறுத்து மாறு மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண் ணன் பணிப்புரை வழங்கியுள்ளார்.

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் புனர மைக்கப்பட்ட யாழ் பிள்ளையார் குளத்தை அண்மை யில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வருகை தந்து பார்வையிட் டுச் சென்றார்.

அதன் பின்னர் குளத்தை சூழல் உள்ள கொங்கிறீட் தூண்களுக்கு பௌத்தக் கொடியை ஒத்த நிறங்கள் தீட்டப்பட்டமையால் இந்த சர்ச்சை எழுந்தது.

இதனைத் தொடர்ந்து முதல்வரால் அந்தப் பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பணிப் புரை வழங்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்தது.

# மன்னார் பிரதேச சபையின் தவிசாளரின் பதவியில் கண்

## கட்சிகள் பலவும் தீவிர முனைப்பு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,செப்.15

மன்னார் பிரதேச சபை தவிசாளரின் பதவி வெறி தானமையால் தவிசாளர் தேர்வில் மீண்டும் கட்சிகள் கவனம் கொண்டுள்ளன.

மன்னார் பிரதேச சபையில் தற்போது 21 உறுப்பி னர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் தவிசா ளரின் பதவி வெறிதானமையால் புதிய தவிசாளர் தேர் விற்கு உள்ளூராட்சி ஆணையாளர் வர்த்தமானி அறி வித்தல் வெளியிட வேண்டும். அவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் வெளியானதும் மீண்டும் தவிசாளர் தேர்வு இடம்பெறும்.

இதற்கமைய மன்னார் பிரதேச சபையில் தற்போ துள்ள 21 உறுப்பினர்களில் தமிழ் அரசுக் கட்சி (கூட்ட மைப்பு) மற்றும் ஐ.தே.கட்சி(அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்) என்பன தலா 07 ஆசனங்களும், மு.காங் கிரஸ், சுதந்திரக் கட்சி ஆகியன தலா 02 ஆசனங்க ளையும் கொண்டுள்ளமையோடு பெரமுன, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி. என்பன தலா ஒரு ஆசனமும் கொண்டுள்ளது.

இந்த சபையில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி. மற் றும் கூட்டணி உறுப்பினர்கள் வழமையாக அ.இ.ம. காங்கிரஸிற்கு ஆதரவு நல்கும் அதேநேரம், மு.காங் கிரஸ், த.தே.கூட்டமைப்பிற்கு ஆதரவளிப்பது வழமை என்பதனால் மீண்டும் தவிசாளர் தேர்வின் போதும் பலமான போட்டி நிலவலாம் என்றே எதிர்பார்க்கப்படு கின்றது.

# வவுனியா பூவரசன்குளம் தடுப்பூசி நிலையத்தில் நேற்று மக்கள் குவிந்தமையால் குழப்பநிலை




வவுனியா, பூவரசன்குளம் பகுதி யில் தடுப்பூசி செலுத்த சென்ற இடத் தில் மக்கள் குவிந்தமையால் குழப்ப நிலை ஏற்பட்டது.

வவுனியாவின் பல்வேறு பகுதி களிலும் கொவிட் இரண்டாவது டோஸ் தடுப்பூசி வழங்கும் செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

அதற்கமைவாக பூவசரன்குளம் வைத்தியசாலையில் சாளம்பைக் குளம், பம்பைமடு, பூவரசன்குளம், வேலன்குளம், செக்கட்டிபுலவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங் கப்படுகின்றது.

கொவிட் அச்சுறுத்தல் காரண மாக ஒரு நாளுக்கு 500 பேருக்கு மட்டுமே தடுப்பூசிகள் வழங்க ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இருப் பினும் அறிவுறுத்தல்களை மீறி 500 பேருக்கு அதிகமானோர் பூவரசன் குளம் வைத்தியசாலைக்கு முன்பாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற் றாது தடுப்பூசி பெறுவதற்காக ஒன்று கூடினர்.

இதனைக் கட்டுப்படுத்தி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வழிப்படுத்த முற்பட்ட போது கிராம அலுவலர் மற்றும் கடமையில் நின்ற உத்தியோகத்தர்களுக்கும் மக்க ளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. இதனால் அப்பகுதியில் சில மணி நேரம் பதற்றமான நிலை காணப்பட்டது. இராணுவத்தினரும், கடமையில் இருந்த உத்தியோகத்தர் களும் குவிந்த மக்களை வெளி யேற்றி நிலைமையை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

# சுசந்திகாவுக்கும் கொரோனா!

இலங்கையின் முன்னாள் ஒலிம்பிக் பதக்கம் வென்ற வீராங்கனையான சுசந்திகா ஜெயசிங்கவிற்கு (47 வயது) கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது.



நேற்று முன் தினம் மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரி சோதனைகளின் முடி வையடுத்து அவருக் குத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ள மையுடன் அவரது இரண்டு குழந்தை களும் தொற்றுக்குள் ளாகியுள்ளனர்.

2000ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் மகளிர் 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற சுசந்திகாவுக்கு பின்னர் வெள்ளிப் பதக்கம் வழங்கப்பட்டது. அவர் இரண்டு உலக சம்பியன் ஷிப் பதக்கங்களை வென்றுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

# தொற்றிலிருந்து மீண்டோர் மன அழுத்தத்தால் பாதிப்பு

கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்த சிலர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அங்கொடை மனநல மருத்துவர் சஜீவன அமரசிங்க தெரிவித்துள் ளார்.

நோய் குணமடைந்த பிறகும் ஏற்படக்கூடிய மூச்சு, பேச்சு மற்றும் நடை பயத்தால் இந்த நிலை ஏற்படுவதாக மருத்துவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக சிலர் மனஅழுத்தத்தால் பாதிக் கப்படுகின்றனர் எனக் கூறிய அவர், அத்தகையவர்கள் 1926 என்ற எண்ணுக்கு அழைக்கலாம் அல்லது அரசு மருத்துவமனைகளில் உள்ள மனநல கிளினிக்குகளில் ஆலோசனை பெறலாம் என்றார்.

வீட்டில் உள்ள சிறுவர்களுக்கு கூட இந்த நிலை ஏற் படலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மாற்றம் ஒன்றே மாறாதது!

**உள்நாட்டு அரசியலும், வெளிநாட்டு இராஜதந்திர உறவாடலும் எப்போதும் ஒரே திசையில் நகர்வதில்லை. எதிர்பாராத திருப்பங்களும், மாற்றங்களும் வழமைதான்.**

**அத்தகைய பெரிய மாற்றத்தை இலங்கை சந்தித்து நிற்கின்றது. அது பலராலும் அவதானிக்கப்படாமல் இருப்பதுதான் வியப்புக்குரியது.**

**ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான தனது வாய் மூல அறிக்கையை ஆணையாளர் மிச்சலி பச்சலெட் அம்மையார் சமர்ப்பித்துவிட்டார். அவரது கருத்து நிலைப்பாட்டை அடியோடு நிராகரிப்பதாக இலங்கையும் தெரிவித்துவிட்டது.**

**வழமைபோல ஆணையாளரின் உரையில் இடம்பெற்ற அம்சங்கள் குறித்து தமிழர் தரப்பில் திருப்தியும், அதிருப்தியும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. அறிக்கை வெளியான கையோடே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும் வரவேற்று விட்டனர். அதனாலேயே அந்த உரையை எதிர்க்க வேண்டும், கண்டிக்க வேண்டும் என்று அதற்கான வாதங்களைத் தேடிப் புறப்பட்டு விட்டனர் நம்மவர்கள் பலர். இது திருத்த முடியாத போக்கு. நாய் வாலை நிமிர்த்த முடியாதல்லவா?**

**வழமையாக ஆணையாளரின் இத்தகைய அறிக்கைகள், முடிவுகள் வரும்போது, இது சர்வதேசம் புலிகளுக்கு – தமிழர்களுக்கு – ஆதரவாக முன்னெடுக்கும் அபத்த நாடகம் அல்லது திருவிழா என்ற கருத்தியலே தெற்கில் பிரதிபலிக்கப்பட்டு வந்ததை நாம் இதுவரைக் கண்டோம். இந்தத் தடவை அது மாறியுள்ளது.**

**இனப்பிரச்சினைத் தீர்வு குறித்தோ நல்லிணக்கம் குறித்தோ ஆணையாளர் இம்முறை எதுவும் பேசவில்லை. வலியுறுத்தவில்லை. அது தென்னிலங்கையரை ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளது. அதிலும் விடப் பேராச்சரியம் என்னவென்றால் தென்னிலங்கைச் சிங்களவர்களின் கரிசனைகள் பலவற்றை அவர் முன்னிறுத்தியிருக்கின்றார் என்பதுதான்.**

**அவசர காலச் சட்டப் பிரகடனம், போராட்டம் நடத்தும் கல்வியாளர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் மீதான பாய்ச்சல்கள், மரண தண்டனைக் கைதி துமிந்த சில்வாவுக்கு மன்னிப்பு அளித்தமை. நீதித்துறை மூலம் தொல்லைப்படுத்துதல், ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு வெடிப்புத் தொடர்பான விசாரணை, தென்னிலங்கையில் பொலிஸ் காவலில் பாதாள உலகக் கும்பல் மற்றும் போதைவஸ்துக் கடத்தல்காரர்கள் கொல்லப்படுத்தல், அரச நிர்வாகத்தை இராணுவ மயப்படுத்தல் என்ற – தென்னிலங்கைச் சிங்களவர்களுக்கு முக்கியத்துவமுடைய – பிரதான – விடயங்கள் பல குறித்து ஆணையாளர் கருத்துத் தெரிவித்திருக்கின்றமையால் தெற்குத் தரப்பினர் இப்போது – வழமைக்கு மாறாக – அவரின் அறிக்கையில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.**

**யுத்த காலத்திலும், பின்னரும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனுக்கும் பிற மேற்குலக நாடுகளுக்கும் சென்ற சமயங்களில் அங்கு ஆர்ப்பாட்டம், குழப்பம் என்று பல நெருக்குவாரங்களும் அரங்கேறின. அவற்றை முன்னெடுத்தவர்கள் புலம் பெயர் தமிழர்கள்.**

**இப்போது பிரதமர் மஹிந்த இத்தாலிக்குச் சென்றிருக்கின்றார். மூன்று இடங்களில் அவருக்கு எதிராக அங்கு ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கின்றன. லண்டனில் ஒரு தடவை அவர் எதிர்கொண்டமை போல இங்கும், கூக்குரலிட்டுக் குழப்பம் பண்ணும் தகராறில் பல நூறு பேர் கலந்து கொண்டு ஆவேசத்துடன் நடந்திருக்கின்றார்கள். அவ்வளவு பேரும் புலம்பெயர் சிங்களவர்கள். முதல் தடவையாக இந்த நிலைமையை எதிர்கொள்கின்றனர் ராஜபக்ஷக்கள்.**

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் உரை மீது தென்னிலங்கைக்கு எழுந்துள்ள காதல், ராஜபக்ஷக்களுக்கு எதிராக புலம்பெயர் சிங்களவர்கள் கிளர்ந்துள்ளமை போன்றவை இவ்விடயங்களில் செல்நெறியில் தலைகீழ் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றமையை உணர்ந்தும் குணங்குறிகள்தான்...!**

# அரசின் கொள்கைகள், முடிவுகள் பெரும் நகைச்சுவையாகி விட்டன

## ஆளும் தரப்பு எம்.பியே சாடல்



முன்னைய 70 - 77 பருவ காலத்திற்கு நாடு திரும்பியதை இட்டு சிலர் பெருமைப்படுகிறார்கள் என்றாலும், அவ்வாறு பெருமைப்படுவதற்குரிய சூழ்நிலை தற்போது இல்லை என்று பொதுஜன பெரமுனவின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

அந்த நேரத்தில் நாடு கடனில்லாத நிலையில் இருந்தது என்பதை சுட்டிக்காட்டிய எம்.பி. தற்போது டிரில்லியன்களில் சர்வதேச சமூகத்திற்கு கடன்பட்ட ஒரு நாட்டிற்கு 70 - 77 இன் கொள்கைகள் எந்த வகையிலும் பொருந்தா என்று கூறினார்.

எல்பிட்டியவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

அரசாங்கம் எடுக்கும் சில முடிவுகள் மற்றும் கொள்கைகள் முழு நாட்டிற்கும் ஒரு நகைச்சுவையாக மாறிவிட்டன. மேலும் அவை சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் இளைஞர்களுக்கு ஒரு நல்ல கடியாக மாறிவிட்டன. இதுபோன்ற கொள்கைகள் காரணமாக, அரசாங்கம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாடும் இறுதியில் நகைச்சுவையாக மாறும் என்று அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவார்ட் கப்ரால் நியமிக்கப்பட்டிருப்பது குறித்து கருத்து தெரிவித்த அவர், மத்திய வங்கி மற்ற அரச நிறுவனங்களைப் போல அரசியலாக்கப்படக் கூடாது என்று கூறினார்.

மத்திய வங்கி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான முடிவுகளை எடுக்க வேண்டும், அரசியல்வாதிகளின் விருப்பங்களை பூர்த்தி செய்ய அல்ல எனவும் குறிப்பிட்டார்.

அஜித் நிவார்ட் கப்ரால் முதன் முதலாக மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினராக இருந்தார் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நெருக்கடி நிலை குறித்து ஆராய

# ரெலோவின் மத்திய குழு 18 ஆம் திகதி கூடுகிறது



தமிழ்த் தேசிய பரப்பில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் பிளவு ஏற்படவுள்ளதாக வெளியாகின்ற கருத்துகள் தொடர்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிவித்த ரெலோ செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), இது தொடர்பில் எதிர்வரும் 18ஆம் திகதியன்று ரெலோவின் மத்திய குழு கூடி ஆராய விருப்பதாகவும் கூறினார்.

தமிழ் மக்கள் மத்தியிலும் அரசியல் பரப்பிலும் ஏற்பட்டுள்ள தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாடுகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்துரைத்த அவர், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு தமிழ்த் தேசியப் பரப்பிலிருந்து பல முனைகளிலும் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன எனவும், இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளினாலும் எழுதப்பட்ட கடிதங்களில் பல குழப்பங்கள் மக்கள் மத்தியில் இருக்கின்றன எனவும் கூறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவடைந்து விட்டது என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவடையாது என்றும் கருத்துகள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கையில், ஒரு கட்சியினரை ஒரு கட்சியினர் வசைபாடிக் கொண்டும் இருக்கின்றனர் எனவும் சாடினார்.

'இந்நிலையில், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழுக் கூட்டம், மெய்நிகர் வழியாக, 11ஆம் திகதியன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், இவ்விடயம் தொடர்பாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டு, இந்தக் குழப்பத்துக்கு முடிவு காண்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

'இதற்கமைய, இது சம்பந்தமாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மத்தியகுழு, எதிர்வரும் 18ஆம் திகதியன்று, மெய்நிகர் வழியாகக் கூடி தீர்க்கமான முடிவொன்றை எடுக்க இருக்கிறது' எனவும் அவர் தெரிவித்தார்.

# மாலைதீவுக்கு மணல் ஏற்றுமதி அரசாங்கப் பணியகம் ஒப்புதல்

மாலைத்தீவில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை நிறுவனம் ஒன்றுக்கு தேவையான வர்த்தக ரீதியிலான மணல் தொகை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என புவிசரிதவியல் மற்றும் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதன் பணிப்பாளர் நாயகம் சஜ்ஜன டி சில்வா அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

மாலைதீவில் புதிய தீவு ஒன்றை நிரப்புவதற்காக இலங்கையில் இருந்து மணல் ஏற்றுமதி செய்யப்பட்டதாக வெளியான தகவல் உண்மைக்குப் புறம்பானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த மணலானது குழாய் இணைப்பு மற்றும் நீர்நிலைகளை நிரப்புவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது.

அதற்காக 8 கியூப் மணல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள நிலையில், கியூப் ஒன்றுக்கு 180,000 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் அறவிடப்பட்டுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் அளவை சுரங்கப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் -76

**ந.வித்தியாதரன்**

தமது அட்சரம் பிசகா உச்சரிப்பு மூலம் தமிழ் நேயர்கள் மனம் கவர்ந்த மூத்த அறிவிப்பாளர் வி.என்.மதியழகன். அவர் தமது ஊடக வாழ்வை ஆரம்பித்த இடம் தினபதி - சிந்தாமணி பயிற்சிக் களம் தான். அதற்குப் பல்கலைக்கழகம் என்றும், அதன் வழிகாட்டியான சிவநாயகம் ஐயா அதன் துணைவேந்தர் என்றும் மிகப்பொருத்தமாக - கனகச்சிதமாக - நாமம் சூட்டுகின்றார் எம்மில் மூத்த ஊடகவியலாளர் வி.என்.மதியழகன். ஞானச்செருக்கு மிக்க 'ராங்கிக்காரி ஜென்ரில்மன் எஸ்.டி.சிவநாயகம்' என்ற தலைப்பில் நமது ஊடக குரு பற்றிய அவரது இந்த மதிப்பீடு சிவநாயகம் ஐயா என்ற மாமனிதரை நம் வாசகர்கள் தரிசிக்கும் நல்ல விவரணமாக அமைகின்றது. இன்றும் நாளையும் அதன் விவரத்தைப் பார்ப்போம்:-

**ஞானச்செருக்கு மிக்க 'ராங்கிக்கார ஜென்ரில்மன்' எஸ். டி. சிவநாயகம்**

எண்பதுகளின் இறுதிக்கூற்று. ரூபவாஹினி காலைநேர 'ஆயுபோவன்' நேரடிஒளிபரப்பு. 'தினபதி பிரதம ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் அவர்கள் என் தொழில் குரு' என்று ஒரு கட்டத்தில் எனது சக சிங்கள, ஆங்கில மொழி அறிவிப்பாளர்களிடம் சொல்கிறேன். அடுத்த சில நாள்களில் கிழக்கிலிருந்து ஒரு கடிதம் எனக்கு வந்து சேர்ந்தது.

'ஓர் அறிவிப்பாளருக்கு ஓர் எழுத்தாளர் எப்படி தொழில் குருவாகலாம்?' என அதில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. அந்த சந்தேகத்தை அடிநாதமாக்கி சில ஆண்டுகளுக்குமுன் நான் எழுதிய கட்டுரை இது.

இந்தக் கட்டுரையை நான் சரியாக எழுதியுள்ளேனா என்பதை நிச்சயப்


கே.கே.இரத்தினசிங்கம்

படுத்த தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் கணபதிப்பிள்ளை குணராஜா அவர்களிடம் அனுப்பினேன். அவர் எனது எழுத்தில் திருப்திப்பட்டதோடு ஒருசில திருத்தங்களையும் சுட்டிக்காட்டினார். அவர் சுட்டிக்காட்டிய விடயம் ஒன்றை திருத்திக்கொள்ள காலைக்கதிர் ஆசிரியர் என். வித்தியாதரன் அவர்களுடன் தொடர்பு கொண்டேன். அவர் உங்கள் கட்டுரையை வாசிக்க விரும்புகிறேன், உடன் அனுப்பி வையுங்கள் என அன்புக் கட்டளை பிறப்பித்தார். 'தினபதி ஆசிரிய பீடத்திற்கு எவ்வாறு மகுடம் சூட்டலாம் என சிந்தித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் அதை ஒரு பல்கலைக்கழகம் என விவரித்துள்ளீர்கள். அது மிகப் பொருத்தம் என பரிபூரணமாக ஏற்றுக் கொள்கிறேன்' என்றார்.

எனது இட்டமான நண்பர்களான குணராஜாவும், வித்தியாதரனும் என்னைப்போலவே சிவநாயகம் அவர்களின் பாசறையில் உருவானவர்களே.

நன்மதிப்பை உடைமையாக்க முயற்சிப்பதிலும் பார்க்க அதற்கு தகுதி பெறுவது மேலானது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தமக்கென்று ஒரு தனித்துவம் பேணிவந்தவர் - இலங்கைத் தமிழ் பத்திரிகையுலகின் ஜாம்பவான் எனப் போற்றிப் புகழப்படும் அமரர் எஸ். டி. சிவநாயகம். துணிச்சலாக நின்று எழுத்துலகில் ஜெயித்துக் காட்டியவர்.



அரசியல் பத்தி எழுத்தைத் தமிழில் முதலில் ஆரம்பித்தவர் என்ற சிறப்பான இடம் சிவநாயகத்துக்கு உண்டு.

செய்தியாளர்கள் அர்ப்பணசிந்தை மிக்கவர்கள். சுதந்திரமாக எழுத விரும்புவார்கள். அவர்கள் எதற்கும் அச்சம் அடையாதவர்கள். வாசகர்களுக்கேயன்றி வேறெவர்க்கும் விசுவாசம் காட்டாதவர்கள். இவற்றில் ஏதாவது ஒன்றை இழந்தால் செய்தியாளர்களின் சுய ஆளுமை பாதிக்கப்பட்டுவிடும் என்ற கொள்கைப் பிடிப்பு உழைக்கும் பத்திரிகையாளராய் விளங்கிய சிவநாயகத்தின் நாடித்துடிப்பாக இருந்தது. சுயவிளம்பரம் தேடிப் போகாத வித்தியாசமான விவேகி. விழாக்களை தவிர்த்து விடுவார். தனது புகைப் படங்கள் பத்திரிகையில் வெளிவருவதை விரும்பாதவர். நம்பிக்கை நிறைந்த ஒருவர் என்பதால் அவர் யாருக்கும் மண்டியிட்டதில்லை.

இரண்டாயிரமாம் ஆண்டு ஏப்ரல் மாதம் இருபத்தியிரண்டாம் திகதி சனிக் கிழமை இயற்கை எய்திய எஸ். டி. சிவநாயகத்தின் சிரார்த்த தினம் அன்னாரது குடும்பத்தினரால் அவரை 'ஆசிரியர்' என அழைத்து மதிப்பளித்து வந்த ஊடகவியலாளர்களால், இதழியலாளர்களால், இலக்கியச்சிறப்பு உள்ளவர்களால் அண்மையில் அனுசரிக்கப்பட்டிருக்கிறது.

சிவநாயகம் திருகோணமலையில் பிறந்தவர். மட்டக்களப்பைச் சேர்ந்த மங்களவதி என்பவரை மனையாளாக்கி சிறந்த இல்லறம் நடத்தியவர். இந்திரஜித், செந்தில்குமார், உதயநாயகம் என மூன்று புதல்வர்களும், திருமதி சித்திரா அருள்ராமலிங்கம் என ஏக புதல்வியும் உள்ளனர். 'லையிற் றீடிங்' மானா மக்கீன் சிவநாயகத்தின் நினைவஞ்சலி தினம் பற்றி முகநூல் மூலமாக எனக்கு ஞாபகமூட்டினார். உடனடியாக கொழும்பு, பம்பலப்பிட்டியில் வாழும் உதயநாயகத்துடன் தொலைபேசி வாயிலாக தொடர்பினை ஏற்படுத்தினேன். அவர் அடுத்த ஆண்டு, 'எனது தந்தையின் நூற்றாண்டு ஜெயந்தி தினம் கடைப்பிடிக்கப்படும். மறந்து போனீரோ' எனக் கேட்டார். என்ன வேகமாய் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது என எண்ணியவாறே எடுத்தேன் என் பேனாவை - வாயாரப் பாடுகிறேன் என் வாழ்நாளில் முதற் தடவையாய் என் குருவின் திருப்புகழை.

அவரது பெயர் சொல்லிச் செருக்குறும் பல மாணவர்கள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி துறைகளில் இன்றும் பணியாற்றி வருகின்றனர். சிவநாயகத்தின் தினபதி - சிந்தாமணி பயிற்சிப் பாசறையில் சேர்ந்திருந்த பலர் புலம்பெயர்ந்து உலகெங்கிலும் பரந்திருக்கிறார்கள்.

சிவநாயகத்தை எந்த இடத்தில், எந்தச் சந்தர்ப்பத்தில் சந்தித்தாலும் என்னைக் கட்டியணைத்து 'இவர் எனது சிஷ்ஷியர்' என சூழ்ந்திருப்பவர்களுக்கு சொல்லிக் கொள்வார். அப்போதெல்லாம் என் மனதில் ஏற்பட்ட நெகிழ்ச்சியினை வார்த்தைகளில் வடித்துவிட முடியாது. ஓர் ஊடகவியலாளர் எப்படி இருக்கவேண்டும் என்ற பாடத்தை எனக்கு எக்கச் சக்கமாக ஊட்டிவிட்டவர் சிவநாயகம்.

கொழும்பு நீதிமன்ற கட்டடத்தொகுதி அமைந்திருக்கும்ஹல்ஸ்டோர்ப்-மிஹிந்து மாவத்தையில் உள்ள பாரிய அடுக்கு மாடிக் கட்டடத்தில் எம். டி. குணசேனா நிறுவனத்தின் சுயாதீன பத்திரிகை சமாஜம் செயற்பட்டு வந்தது. சிங்கள மொழியில் 'தவஸ' நாளிதழ், 'றிவிரஸ' வார வெளியீடு - ஆங்கில மொழியில் 'சன்' நாளிதழ், வீக் என்ட் வார வெளியீடுகள் போல் தமிழில் தினபதி நாளிதழும், சிந்தாமணி வார வெளியீடும் பிரசுரிக்கப்பட்டு வந்தன. சிவநாயகத்தை பிரதம ஆசிரியராகக் கொண்ட தினபதி - சிந்தாமணி ஆசிரிய பீடம் ஒரு பல்கலைக்கழகமென மிளிர்ந்தது. சிவநாயகம் ஒரு கம்பீர


கே.குணராசா

மான துணை வேந்தர் போலவே திகழ்ந்தார். அவரிடம் நானும் படித்தேன் - ஊடகத்துறையின் அடிப்படைப் பாடங்களை.

எஸ். டி. எஸ்ஸின் பத்திரிகைத்துறை அனுபவ வரலாற்றை இன்னும் சற்று பின்னோக்கிப் பார்ப்போம். எஸ். டி. சிவநாயகம் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றியபோது தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சியை உயர்த்தி வைக்கும் வகையிலான அரசியல் கட்டுரைகளை ஆணித்தரமாக எழுதிவந்தவர். வாசகர்களின் கேள்விகளுக்கு 'குயுக்தியார்' என அவதாரம் எடுத்து அவர் எழுதிய பதில்கள் வாசிப்போரை வியக்க வைத்தன. சிவநாயகத்தின் விவேகம் சுதந்திரன், வார இதழ் விற்பனையில் பெரும் வேகத்தை ஏற்படுத்தியது. தமிழரசுக் கட்சியின் வளர்ச்சியில் அவருக்கிருந்த பங்கு அதிகம்.

வீரகேசரி பத்திரிகை அதன் தொடக்க காலம் தொட்டு தமிழகத்தைச் சேர்ந்தவர்களையே ஆசிரியர்களாகக் கொண்டிருந்தது. அது இலங்கையர் ஒருவரை ஆசிரியராக நியமித்து வெளிவர ஆரம்பகர்த்தாவென திகழ்ந்தவர் சிவநாயகமே.

ஆயினும் 1966 - இல் அவர் வீரகேசரியை விட்டு வெளியேறினார். சுயாதீன பத்திரிகா சமாஜத்தில் சேர்ந்து கொண்டார். தினபதி - நாளேடு, சிந்தாமணி - வார வெளியீடு என்பவற்றின் பிரதம ஆசிரியர் பொறுப்பினை வகிக்கத் தொடங்கினார். இலங்கை பத்திரிகைத்துறை வரலாற்றில் புதிய சகாப்தம் உதயமானது.

தினத்துக்கு அதிபதியானவன் கிழக்கில் உதிக்கும் சூரியன். அதையே மனதில் வைத்து புதிய நாளேட்டுக்கு தினபதி எனப் பெயர் வைத்தார். கேட்டதையெல்லாம் கொடுக்கும் தேவமணி என்ற அர்த்தம், சங்கத் தமிழ் மூன்றும் தந்த சிந்தாமணிப் பிள்ளையார் என்ற விநாயகப்பெருமானின் ஒரு நாமம் என்பவற்றை ஒருங்கிணைத்து வார வெளியீட்டுக்கு சிந்தாமணி எனப் பெயர் வைத்தார். சீவக சிந்தாமணி இலக்கியமும் அவர் மனதில் இருந்தது. படித்தவர்கள், பண்டிதர்களை மட்டுமல்லாது பாமரர்களையும் கவரக்கூடிய அம்சங்களையெல்லாம் அவற்றில் அறிமுகப்படுத்தினார்.

தினபதியில் கே. ரட்ணசிங்கம், சிந்தாமணியில் ராஜ அரியரட்ணம் என்போர் சிவநாயகம் என்ற ஊடக மன்னனின் சேனாதிபதிகள் என விளங்கி அவருக்கு உறுதுணை வழங்கினர்.

ஊடகவியலாளர் வாழ்க்கை முறைக்கு இலக்கணம் கற்பித்த ஊடக மேதை கே. கே.இரத்தினசிங்கம் தினபதி - சிந்தாமணி பிரதம செய்தி ஆசிரியராக விளங்கியவர். செய்தி எழுதுவது எப்படி, எல்லோரும் இலகுவாக பரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிமையாக பந்தி பிரித்து எழுதுவது எப்படி என்ற நுட்பத்தை அவரிடம் நான் தெரிந்து கொண்டேன். ஊடகவியலாளர் ஒருவருக்கு இருக்கவேண்டிய தற்துணிவினை சிவநாயகம், இரத்தினசிங்கம் ஆகியோரின் நாளாந்த செயற்பாடுகளிலிருந்து நான் சுவீகரித்துக்கொண்டேன்.

(09ஆம் பக்கம் பார்க்க)


1990 இல் வெள்ளவத்தை பிள்ளையார் கோவில் மண்டபத்தில் தியாகராஜர் உற்சவம் இடம்பெற்றபோது வி.என்.மதியழகன் குடும்பம் சிவநாயகம் ஐயாவுடன். (படப்பிடிப்பாளர்:சுரேந்திரன்)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -


# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

அங்கம் - 131

**356. நாடு கடந்த தமிழீழ அரசு ஏன் அமைக்கப்பட்டது?**

ஸ்ரீலங்கா அரசு போரில் விடுதலைப் புலிகளை அழித்த பின், அவர்களின் புலம்பெயர் ஆதரவாளர்களின் மன ஓட்டங்களில் ஈழத்தில் உள்ள தமிழர்களுக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு தலைமை இல்லை என்பதே எண்ணமாக இருந்து வந்தது. அந்தத் தலைமை தமிழ் மக்களின் புலம்பெயர் மக்களிடமே கையளிக்கப்பட்டிருக்கிறது, ஏனெனில் அவர்கள் மட்டுமே அவர்களின் அபிலாஷைகளுக்கும், அரசியலுக்கும் நேரத்தை ஒதுக்கவும், அதற்கான அரசியல் நிலைப்பாட்டிற்கான தீர்வை எடுக்கக் கூடிய அதிகாரத்தையும் கொண்டுள்ளார்கள் என்ற நிலையும் எடுக்கப்பட்டது.

அதன் உந்து சக்தியாக விடுதலைப் புலிகளின், கே.பி. அவர்களது சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமாரன், மற்றைய அவர்களது புலம்பெயர் அமைப்பாளர்களும், தமிழ் ஈழத்தை வென்றெடுப்பது புலம்பெயர் தமிழ் மக்களால் தான் முடியும். அதற்காக அவர்களின் அர்ப்பணிப்புத் தேவை, அவற்றுக்கான ஊக்குவிப்பை விடுதலைப் புலிகளின் அமைப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.



Tamil Referendum Council of Australia

ஆஸ்திரேலியத் தமிழ் வாக்குக்கணிப்புக் குழு

REFERENDUM OF SRI LANKAN TAMILS IN AUSTRALIA ON VADDUKKODDAI RESOLUTION OF 1976

WHY VADDUKKODDAI RESOLUTION NOW IN AUSTRALIA

WHY THIS REFERENDUM

WHO IS ELEGIBLE TO VOTE & HOW DO YOU VOTE

WHEN IS THE REFERENDUM

Dates: Saturday the 17th & Sunday the 18th April 2010

Time : 8.00 am to 6.00 pm on both days.

VENUES FOR POLLING BOOTHS:

RESOLUTION OF THE REFERENDUM

We invite all Tamils (from the island of Sri Lanka) in Australia to join hands and participate in the referendum.

Phone: 1300 464 402 Email: info@vkr1976.com.au Web site: www.vkr1976.com.au

ஆஸ்திரேலியாவில் வாக்கெடுப்புத் தொடர்பான சுற்றுநிருபம்.

தமிழ் மக்களுக்கு சுதந்திர தமிழ் ஈழம் அமைய வேண்டும் என்பதில் உருத்திரகுமாரன் அசையாத நம்பிக்கை கொண்டவர். பின்னர் உருவாக்கப்பட்ட நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் பதவி மூத்த விடுதலைப் புலிகளின் தளபதிகளால் தன்மீது திணிக்கப்பட்ட ஒன்று தான், விடுதலைக்காக உயிர்த்தியாகங்கள் செய்த மாவீரர்கள் போல் அர்ப்பணிப்புக்காகவே வந்தேன் என்பதே அவரது பேச்சுக்களின் சாரம்.

இந்தச் சிந்தனைப் போக்கைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் சர்வதேச அமைப்பாளர்களின் அனுசரணைகளில், தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்த சர்வதேச நாடுகளான பிரித்தானியா, கனடா, ஆஸ்திரேலியா, நோர்வே, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, டென்மார்க், இத்தாலி, நெதர்லாந்து போன்றவற்றில் அந்தந்த நாடுகளின் சட்டத்திற்கு அமைய, சுதந்திரமாக இயங்கும் தேர்தல் அமைப்புக்களைப் பணிக்கு அழைத்து, ஒருவாக்கெடுப்பு நடத்தினார்கள். அதில் வாக்களிப்புக்கு கேட்கப்பட்ட பிரகடனம்:-

"ஸ்ரீலங்காவின் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான இனம் என்பதாலும் அவர்களுக்குப் பாரம்பரிய பிரதேசம் அமைந்ததாலும் தங்களை தாங்களே ஆளுவதற்கான அரசை அமைக்கவும், சுய நிர்ணய உரிமையும் இருப்பதால் நான் ஸ்ரீலங்காவின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஓர் இறைமையுள்ள சுதந்திர தமிழீழ அரசை ஏற்படுத்த நாடுகிறேன்" என்பதே.

I aspire for the formation of the independent and sovereign state of Tamil Eelam in the North and East territory of the Island of SriLanka on the basis that the Tamils in the Island of SriLanka make a distinct nation, have a traditional homeland and have the right to form a self government and to self determination



நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன்.

இந்த வாக்கெடுப்பு மே 2009 இல் இருந்து ஏப்ரல் 2010 வரை நாடுகள் வாரியாக நடத்தப்பட்டு வாக்களித்தோரில் ஒவ் வொரு நாட்டிலும் சராசரி 99% ஆதரவாக வாக்களித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் வழிநடத்தலில் தற்காலிக ( Provisional) தமிழீழ அரசு நாடு கடந்த முறையில், அதாவது எல்லைகளற்ற விதமாக சர்வதேசங்களில் அமைப்பதாக முடிவானது. (Transnational Government of Tamil Eelam)

**357. இதற்கு நாடாளுமன்ற பிரதமர், மந்திரிகள் காரியாலயங்கள், தேர்தல்கள் என்று இருந்தனவா?**

இந்த அரசு ஸ்ரீலங்காவில் இருக்கவில்லை. அதனை ஸ்ரீலங்கா அரசு அங்கு விட்டிருக்கப் போவதில்லை. வெளிநாட்டில் அதற்கு ஆதரவு தரக்கூடிய நாட்டில் அமைக்கப்படவில்லை. ஆகவே ஒரு நாட்டில் அதன் நாடாளுமன்றம் என்று இருக்கவில்லை.

ஆலோசனைக் குழுவின் வழிநடத்தலில் ஒவ்வொரு நாட்டிலும், தேர்தல்கள் நடாத்தி அதன் ஊடாக ஒவ்வொரு நாடுகளிலும் பிரதிநிதிகளைத் தேர்வுசெய்து 135 அங்கத்தினர்களைக் கொண்ட நாடாளுமன்றை (நாடு கடந்த முறையில்) அமைத்தனர். அதில் 115 பேர் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள். இருபது பேர் தெரிவு செய்யப்பட்டோரால் பல, பல நாடுகளில் இருந்து நியமிக்கப்பட்டவர்கள். ஒவ்வொரு நாட்டிலும் காலத்துக்குக் காலம் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் கூடித் தீர்மானங்கள் எடுத்தனர். அவர்களிடையே அமைச்சுப் பதவிகளும் பகிர்ந்து தரப்பட்டன. உருத்திரகுமாரன் நியூயோர்க்கில் இருந்தமையால் பிரதமரின் காரியாலயம் அங்கு இருந்தது.

(வளரும்....)




நாடு கடந்த தமிழீழ அரசின் இலச்சினை



நாடு கடந்த தமிழீழ அரசின் அமர்வு ஒன்று.

காலைக்கதிர் Kalaikkathir

## அரசாங்கம் விதித்திருக்கும் உத்தரவாதத் தொகை அதிகரிப்பால்

# ஸ்மார்ட் போன்கள் இலத்திரனியல் பொருள்களின் விலைகள் பதினைந்து வீதத்தினால் அதிகரிக்கும்

**இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு அரசாங்கம் உத்தரவாதத் தொகை அதிகரிப்பு காரணமாக பெறுமதிமிக்க ஸ்மார்ட் போன் வகையான கையடக்க தொலைபேசிகளின் விலைகள் பதினைந்து சத வீதத்தினால் அதிகரிக்கலாம். அத்துடன் அனைத்து வகையான இலத்திரனியல் பொருள்களின் விலைகளும் தற்போதுள்ள விலையை விட ஐந்து சத வீதத்தால் அதிகரிக்கலாம் என இலத்திரனியல் பொருள்கள் இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் உறுப்பினரும் இறக்குமதியாளருமான ஜே. உதயகுமார் தெரிவித்தார்.**

தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசியமற்ற பொருள்கள் இறக்குமதிக்கு அரசாங்கம் விதித்திருக்கும் உத்தரவாதத் தொகை அதிகரிப்பு எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இறக்குமதிக்கானஉத்தரவாதத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதால் சாதாரண இறக்குமதியாளர்களே அதிகம் பாதிக்கப்படுவர்.

உத்தரவாத தொகையை முழுமையாக செலுத்த முடியாத நிலை ஏற்படும்போது அவர்கள் இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொள்வார்கள். அதனால் அவர்களின் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகிறது.

அதேபோன்று அவர்கள் உத்தரவாதத் தொகையை முழுமையாக செலுத்தி, நம்பிக்கையுடன் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாத நிலையே காணப்படுகிறது.

ஏனெனில் புதிதாக இறக்குமதி செய்யப்படும் அனைத்துப்பொருள்களின் விலையும் பாரியளவில் அதிகரிக்கப்படும். அவ்வாறான நிலையில் சாதாரண மக்கள் விலை அதிகரிப்பு காரணமாக அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு பின்வாங்குவார்கள். அதனால் இறக்குமதியை குறைக்கவேண்டிய நிலை ஏற்படும்.- என்றார்.

# நீரில் மூழ்கி ஒருவர் சாவு

இரத்தினபுரி மாவட்டம், நிவித்திகல - நிரிஎல்ல கங்கையில், மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நிரிஎல்ல வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நீரில் மூழ்கிய நபரைப் பிரதேச மக்கள் மீட்டு, நிவித்திகல வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக நிவித்தகல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பில்நிவித்திகலபொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இலவசக் கல்வி உரிமைக்கு அரசு ஆப்பு!

## குற்றம் சுமத்துகின்றது ஐ.தே.கட்சி

இலவசக் கல்வியின் சம உரிமையை அரசு இல்லாமலாக்கியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் இணைய வழியில் கல்வி கற்பதற்கு அத்தியாவசியமான உபகரணங்களின் விலைகளை அதிகரிக்கச்செய்திருப்பதன் மூலம் இதனை இல்லாது செய்துள்ளது எனவும் அவர் மேலும்குற்றம்சாட்டியுள்ளார்.

தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற பொருள்கள் இறக்குமதிக்கு அரசாங்கம் விதித்திருக்கும் உத்தரவாத தொகை அதிகரிப்பினால் மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத்தெரிவிக்கையில்-

கொரோனாத் தொற்று நிலைமையில் மாணவர்கள் கல்வியையே பெற்றுவருகின்றனர்.

இவ்வாறான நிலையில் மாணவர்களுக்கு அத்தியாவசியமான தொலைதொடர்பு உபகரணங்களின் விலை அதிகரிக்கச்செய்துள்ளது. இறக்குமதி விதிமுறைகளை விதிப்பதன் மூலம் இலவசக்கல்வியின் சமஉரிமையை இல்லாமலாக்குவதற்கு நடவடிக்கையையே அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

பொருளாதார பிரச்சினைக்கு மத்தியிலும் இணையவழிக் கல்வியை பெற்றுக்கொடுப்பதற்காக பெற்றோர்கள் மிகவும் சிரமத்துடன் தங்கள் பிள்ளைகளுக்கு தொலைபேசி மற்றும் மடிக்கணணிகளை கொள்வனவுசெய்துகொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் அரசாங்கம்தொலைதொடர்பு உபகரணங்களை அத்தியாவசியமற்றதாகஉள்ளடக்கி, இறக்குமதி விதிமுறைகளுக்குள் அடக்கி இருக்கின்றது. அதனால் இந்த பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அத்துடன் எமது நல்லாட்சி அரசாங்க காலத்தில் மாணவர்களுக்கு இலவசடெப் கணணிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தபோது, இன்று ஆட்சியில் இருப்பவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இலவசக்கல்வியை இல்லாமலாக்கி, வசதி குறைந்த மாணவர்களை தங்களின் கைப்பாகையாக ஆக்கிக்கொள்வதற்கான திட்டமாகவே தெரியவருகின்றது. - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் மரணம்!

மாத்தறை மாவட்டம், கொட்டவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 29 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நபரின் படுகொலை தொடர்பில் சந்தேகத்தின்பேரில்ஒருவரைப்பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

மிதிகம, அஹங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் சேவை

குடிவரவு, குடியகல்வு மாத்தறை, கண்டி, குருநாகல் மற்றும் வவுனியா பிரதேச அலுவலகங்கள் அத்தியாவசிய சேவை பெறுநர்களுக்காக இன்று முதல் இயங்கும் என திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, அத்தியாவசிய சேவைகளை பெறும் தேவையுடைய சேவை பெறுநர்கள் மாத்திரம் தாம் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள அலுவலகத்திற்குச் செல்ல முடியும்.

பத்தரமுல்லை தலைமைக் காரியாலயம் தொடர்ந்தும் ஒரு நாள் சேவை ஊடாக வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொடுப்பதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மாத்தறை, கண்டி, வவுனியா, குருநாகல் பிராந்திய காரியாலயங்கள் காலை 09 மணி முதல் மதியம் 01 மணி வரை திறந்திருக்கும் என திணைக்களம் அறிவித்துள்ளது.

நிலவும் பெருந்தொற்று நிலைமையை கருத்திற்கொண்டு அரசாங்கத்தினால் அவ்வப்போது எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கு ஏற்ப, திணைக்களத்தின் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# உள்ளாடைகளை சொகுசுப் பொருளாக மாற்றிய ஒரே அரசு கோட்டாபய அரசே!

## போட்டுத் தாக்குகின்றது ஐக்கிய பிரஜைகள் சங்கம்

உள்ளாடைகளைச் சொகுசுப் பொருளாக மாற்றிய ஒரே அரசு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுதான்.

- இவ்வாறு ஐக்கிய பிரஜைகள் சங்கத்தின் ஒருங்கமைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தான் ஆட்சிக்கு வந்து முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி அன்று தெளிவாகக் கூறினார். நான்தான் சிறப்பாகச் செய்தேன் என்று கூறினார். இவ்வாறு கூறிய பல விடயங்கள் எமக்குத் தெரியும்.

வந்தவுடன் சங்கரில்லா முதலாளிக்கு இடங்களை மாற்றிக்கொடுத்தனர். இதனை வேறும் யாரும் செய்யவில்லை. ஜனாதிபதி செய்த சிறந்த வேலை அது. அதன் பின்பு சங்கரில்லா முதலாளிக்குத் தேவையான அளவில் சீனியைத் திருடுவதற்கு இடம்கொடுத்தனர். அதன் பின்பு கோடிக் கணக்கில் பாட்டெழுதி, சுற்றுலாப் பயணிகளை வரவழைத்து கொரோனாத் தொற்றின் முதலாம்அலையை ஏற்படுத்தினர்.

தடுப்பூசியைக் கொண்டு வந்ததன் பின்பு தங்களுக்குத் தேவையானவர்களுக்குத் தடுப்பூசிகளைப் பிரித்துக் கொடுத்தனர். தடுப்பூசி சலுகைகளை வழங்கினர்.

இவ்வாறான அனைத்து விடயங்களையும் ஒன்றிணைத்து செய்த மிகச்சிறந்த வேலைத்திட்டமாக தற்போது ஒரு விடயத்தை ஜனாதிபதி செய்துள்ளார். உலகில் வேறு எந்த அரசும் செய்யாத வகையில், உள்ளாடைகளை சொகுசுப் பொருளாக மாற்றியுள்ளனர். இவ்வாறான அரசு நமக்குத் தொடர்ச்சியாக வேண்டுமா? தற்போதைய அரசின் அரசியல் முடிவுக்கு

# 'சன்ஷைன் சுத்தா' கொலை தொடர்பில் இதுவரை மூன்று சந்தேகநபர்கள் கைது

போதைப்பொருள் கடத்தல்காரரும் பாதாள உலகக்குழு உறுப்பினருமான சன்ஷைன் சுத்தாவின் கொலையுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர்கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் வெலிகம பகுதியில் பாதாள உலகக்குழு உறுப்பினர் ஒருவரின் சாரதியாகச் செயற்பட்டவர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார்.

அமில பிரசங்க ஹெட்டிஹேவா எனப்படும் சன்ஷைன் சுத்தா கடந்த 3 ஆம் திகதி - ஹேன்வலவில் அமைந்துள்ள, பெண் ஒருவரின் வீட்டுக்குச் சென்று திரும்பிய சந்தர்ப்பத்தில் கொட்டவில - வரக்காபிட்டிய பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். சம்பவம்தொடர்பில் இதுவரை மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சன்ஷைன்சுத்தாவுடன்தொடர்பில் இருந்த பெண்ணின் கணவரும் கொலைக்கு உதவியமை மற்றும் சதித்திட்டம் தீட்டியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கடவுளர்களுக்கு இடையிலேயே முரண்பாடுகள் உள்ளபோது கட்சிகளுக்கு இடையே முரண்பாடுகள் இல்லாமல் போகுமா?

## பிரிந்து செயற்படுவதற்கு அரியநேத்திரன் சப்பைக்கட்டுச் சமாதானம்



முரண்பாடுகள், ஒத்த கருத்துகள், கருத்தொற்றுமை போன்றவை மனிதர்களுக்கு மட்டுமல்ல கடவுளர்களிடமும் இருந்தவைதான். கடவுள் இடத்திலேயே முரண்பாடுகள் உள்ளபோது கட்சிகளிடையே முரண்பாடுகள் இல்லாமல் போகுமா எனக் கேட்கிறார் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளரும், பட்டிருப்பு தொகுதி இலங்கைத் தமிழரசு கட்சிதலைவருமான பா.அரியநேத்திரன்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக ஒரு கடிதம் அனுப்பவில்லை, பலரும் வெவ்வேறு விதமாகக் கடிதங்களை அனுப்பியமை உங்களிடம் கருத்தொற்றுமை இல்லை என்பதையே வெளிக்காட்டுகிறதே என ஊடகவியலாளர் கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் கருத்து கூறுகையில் தெரிவித்தவை வருமாறு:-

சிவபெருமானும், உமாதேவியாரும் தமது பிள்ளைகளான பிள்ளையாரையும், முருகப்பெருமானையும் அழைத்து முதலில் உலகை சுற்றிவருபவருக்கு மாம் பழம் பரிசாக தருகிறோம் என்றனர். அப்போது பிள்ளையார் சிவனையும் உமை அம்மையையும் சுற்றிவந்து தாயும் தந்தையுமே உலகம் என்றார். அவருக்கு மாம் பழம் பரிசாக கிடைத்தது.

ஆனால் முருகப்பெருமான் மயில் மீது ஏறி அமர்ந்து ஊர்,உலகம்,வனந்தரம் எல்லாம் சுற்றி அதுவே உலகம் என்றார்.

இதில் பிள்ளையாரான தமையனுக்கும், முருகப் பெருமானான தம்பிக்கும் கருத்தொற்றுமையோ, செயல் ஒற்றுமையோ இருக்கவில்லை. முரண்பாடான முடிவுகள் வெளிப்பட்டன. இது, கடவுளருக்கே ஒற்றுமையான ஒரு முடிவை எடுக்கமுடியாது என்பதை வெளிக்காட்டுகிறது அல்லவா? அப்படி எனில் எப்படி மனிதர்கள் ஒற்றுமையாக ஒரு முடிவுக்கு வரமுடியும் என்பதைச் சிந்தியுங்கள்.

இது இன்று, நேற்றல்ல, தமிழ்தேசியக்கூட்டமைப்பு 2001,ஒக்டோபர் 20 ஆம் திகதி உருவாக்கப்பட்டு 2001 டிசெம்பர் 09 ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது தேர்தல் தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில்தான் வடக்கு, கிழக்கு மகாணத்தில் போட்டியிட்டு 18 ஆசனங்களைப் பெற்றது.

ஆனால், 2004 ஏப்ரல்8 இல் இடம்பெற்ற இரண்டாவது தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவில்லை அல்லவா?

ஆனந்த சங்கரி ஐயா தமது கட்சி தமிழர் விடுதலை கூட்டணிக் கட்சியையும் அதன் சின்னத்தையும் தர மறுத்து சென்றதால்தானே இலங்கை தமிழரசு கட்சி வீட்டுச்சின்னத்தில் அந்த தேர்தலில் போட்டியிட்டு 22 ஆசனங்களைப் பெற்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து முதலாவதாகப் பிரிந்து சென்ற வரலாறு தமிழர் விடுதலை கூட்டணி கட்சியின் செயலாளர் ஆனந்தசங்கரி ஐயாவையே சாரும். அவர்தான் முதல் முதல் ஒற்றுமையைக் கெடுத்தவர். இந்த வரலாறு பலருக்கும் தெரியாது.

அவர் முரண்பட்டு உதயசூரியனுடன் பிரிந்து சென்றாலும் தமிழ்தேசியக் கூட்டமைப்பு தளர்வு அடையவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னம் மூலம் தொடர்ந்தும் பயணித்துக்கொண்டே இருக்கிறது.

2009 மே 18 முள்ளிவாய்க்கால் போர் மௌனத்திற்கு பின்னரே 2010 ஏப்ரல் 8 ஆம் திகதி தேர்தலுடன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பத்மினி சிதம்பரநாதன், செ.கஜேந்திரன் ஆகியோர் இரண்டாவதாகப் பிரிந்து சென்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தாம் இணைய மாட்டோம் என 2001 இல் அடம்பிடித்த புளொட் கட்சி 2009 மே 18 முள்ளிவாய்க்கால் போர் மௌனத்திற்குப் பின்னர் இரண்டு வருடங்கள் கடந்து 2011 இல் அக்கட்சி சித்தார்த்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டது.

2013 இல் மீண்டும் ஆனந்த சங்கரி ஐயாவுக்கு ஒன்றுமே செய்ய முடியாமல், ஞானம் பிறந்து, தமிழர் விடுதலை கூட்டணி வட மகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டார். தேர்தலில் ஆனந்தசங்கரி ஐயா வெற்றி பெறாமையால் பின்னர் தானாக மழைக்கு முளைத்த காளான் போல் வந்த வேகத்தில் ஒதுங்கிவிட்டார்.

2020 ஒகஸ்ட் 05 தேர்தலுக்கு முன்னதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் பிறேமச்சந்திரன் உள்ளிட்ட கட்சி தமிழ்தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகியது. இது தமிழ்தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகிய மூன்றாவது கட்சியாகும்.

வேறு ஓர் அணியாக வடமாகாண சபை முதலமைச்சராக இருந்த சி.வீ.விக்கினேஸ்வரன் ஐயா, ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் என பலரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகித் தனித்தனிக் கட்சிகளை அமைத்துச் செயல்பட்டனர்.

தற்போது அவர்கள் மீண்டும் ஒற்றுமையாக செயல்பட வேண்டுமென்ற கருத்தும் அவர்களிடம் உள்ளது. அது நல்ல விடயம்.

அது ஒரு புறம் இருக்க தற்போது ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினாலும் ஒற்றுமையாக - ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் - கடிதம் அனுப்ப முடியவில்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிளவு, பிரிவு ஏற்பட்டதாக பல ஊடகங்களும், பல அரசியல் தலைவர்களும், ஆய்வாளர்களும் கருத்துக்களை தெரிவிக்கின்றமையைக் காண முடிகிறது.

அவ்வாறு எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிந்து செல்லவில்லை. ஆனால் கருத்தொற்றுமை இல்லை என்பதால், வெவ்வேறாகக் கடிதங்கள் அனுப்பியமையை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். சம்பந்தன் ஐயா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் , மாவை சேனாதிராசா ஆகிய தலைவர்களும் தாம் எக்காரணம் கொண்டும் தமிழ்தேசியக் கூட் டமைப்பில் இருந்து வெளியேறவில்லை என்பதையே கூறியுள்ளனர்.

கருத்து முரண்பாடு ஜனநாயகக் கட்சிகளிடையே வருவது வழமை. அதை சீர் செய்து தமிழ்தேசிய அரசியல் பணி தொடரும். - எனவும் மேலும் கூறினார்.

## மூவாயிரம் பாடசாலைகளை அடுத்த மாதம் திறக்கலாமாம்

*இருநூறுக்கும் குறைவான மாணவர்களின் எண்ணிக்கை கொண்ட பாடசாலைகளை அடுத்த மாதத்தில் மீண்டும் திறக்க முடியும் என நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.*

*கொரோனா தடுப்பு செயலணியுடன் இணைந்த இந்தக் குழுவால் எட்டப்பட்ட பரிந்துரைகள் செப்டெம்பர் 17 ஆம் திகதி ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.*

*இருநூறுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட கிராமப்புறங்களில் உள்ள சுமார் 3,000 பாடசாலைகளை ஆரம்பத்தில் மீண்டும் திறக்க முடியும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.*

*மேலும் குறித்த பாடசாலைகளை ஒரு முறையான திட்டத்தின் கீழ் திறக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சருக்கு வழங்கிய பரிந்துரையில் அந்தச் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.*

*12 தொடக்கம் 18 வரையான வயதுடைய மாணவர்களுக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரையின்படி பைஸர் தடுப்பூசியை செலுத்த வேண்டும் என்ற பரிந்துரையும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டது.*

*அதன்படி மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்காக ஒக்டோபர் மாதத்தில் இலங்கைக்கு பைஸர் தடுப்பூசியின் நாற்பது லட்சம் டோஸ் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

## மட்டக்களப்பில் அநாவசியமாக நடமாடுவோர் மடக்கப்பட்டு கொரோனாப் பரிசோதனைக்கு!






**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு,செப்.16

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தினை மீறியவர்கள் அன்டிஜன் பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டபோது 05பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு சுகாதார வைத் திய அதிகாரி டாக்டர் கே.கிரிசுதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தினை மீறியவர்களை கண்டறியும் சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கிரிசுதனின் ஆலோசனைக்கு அமைவாக கோட்டைமுனை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தலைமையில் மட்டக்களப்பு பொலிஸாருடன் இணைந்து நேற்றுக் காலை முதல் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.


இதன்போது ஊடரங்கு உத்தவை மீறி வீதிகளில் அநாவசியமாக பயணிப்போர், ஊரடங்கு விதிமுறையினை மீறி வியாபார நிலையங்களை திறந்து வைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டோர் உள்ளிட்டோரைப் பொலிஸார்மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் பஸ்களில் ஏற்றிச்சென்று அன்டிஜன் பரிசோதனைகளுக்குட்படுத்தினர்.

மட்டக்களப்பு நகர் பகுதி, புகையிரத நிலைய வீதி, பார் வீதி மற்றும் கூளாவடி போன்ற பகுதிகளில் அநாவசியமாக நடமாடித்திரிந்தவர்கள் உள்ளிட்ட 70 இற்கு மேற்பட்டோர் இதன் போது பொலிஸாரினால் மடக்கப்பட்டு பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டு பார் வீதியில் வைத்து அன்டிஜன்பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதன்போது வீதிகளில் அநாவசியமான நடமாடியவர்களில் ஐவர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்எனக்கோட்டைமுனை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

நேற்றைய தினம் பார் வீதியில் 99பேர் அன்டிஜன் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர் எனவும் அதில் 17 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர் எனவும் அவற்றில் ஐந்து பேர் வீதியில் அநாவசியமாக நடமாடியவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# பருப்பின் விலையும் எகிறும் சாத்தியம்



பருப்பின் விலை அதிகரிக்கக்கூடும் என அத்தியாவசிய பொருள்களின் இறக்கு மதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது சந்தையில் பருப்பின் விலை யானது 250 ரூபா வரையில் அதிகரித்துள் ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டிற்கு ஆஸ்திரேலியா மற்றும், கனடாவில் இருந்து பருப்பு கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், கனடாவில் விளைச் சல் குறைந்துள்ளமையால் பருப்பின் விலை அதிகரிக்கும் சாத்தியம் எழுந்துள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாட்டை ஏற்கிறது அரசாங்கம்



நாட்டில் அத்தியாவசிய பொருள் களுக்கான தட்டுப்பாடு நிலவுகின் றமையை அரசாங்கம் பகிரங்க மாக ஏற்றுக்கொண்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடந்த அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் ஊடக சந்திப்பில் உரை யாற்றிய ஊடக அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான டளஸ் அழகப்பெரும, நாட்டில் அத் தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு இருப்பதாகக் குறிப்பிட் டார்.

வரும் 21ஆம் திகதிக்குப் பின் னர் நிலைமை வழமைக்குத் திரும்பிவிடும் என்றும் அவர் குறிப் பிட்டார்.

இதேவேளை அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாடு மற்றும் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாக வெளியாகின்ற தகவல்களை அண் மையில் பி.பி.சி. செய்திச் சேவைக்கு அளித்த செவ்வியின்போது முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்நிவாட் கப்ரால் நிராகரித்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 'ஷ்டியப்தம்' சோதிட நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது

காரைதீவைச் சேர்ந்த ஆசிரியரும், சோதிடக் கலைஞருமான கருணாகரம்பிள்ளை ரவீந்திரன் எழுதிய 'ஷ்டியப்தம்' என்ற சோதிட நூல் வெளியீட்டு நிகழ்வு காரைதீவில் நேற்று முன்தினம் நடைபெற் றது.

வாழ்க்கையை செம்மைப்படுத்தக்கூடிய பல பெறுமதி வாய்ந்த குறிப்புகளை உள்ளடக்கிய ஆக் கத்தொகுப்பு நூலான 'ஷ்டியப்தம்', ஆசிரியரும் சோதிடக்கலைஞருமான கருணாகரம்பிள்ளை ரவீந்திரன் தனது 60ஆவது அகவையையொட்டி எழுதி வெளியிட்ட நூலாகும்.

85 சிறுசிறு தலைப்புகளில், 130 பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ள இந்நூல் வெளியீட்டு நிகழ்வு, கொவிட் காரணமாக மிகவும் எளிமை யாக குடும்ப உறுப்பினர்களுடன் மாத்திரம் சுகா தார நடைமுறைகளுடன் இடம்பெற்றது.

'இராகி' என அழைக்கப்படும், பிரபல எழுத்தாள ரும் ஓய்வுபெற்ற அதிபருமான இரா.கிருஷ்ண பிள்ளை முன்னிலையில் அவரது இல்லத்தில் இந்நூல் வெளியீட்டுநிகழ்வு இடம்பெற்றது. எழுத் தாளரும் உதவிக்கல்விப்பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜாவும் கலந்துசிறப்பித்தார்.

ஆசிரியரும், சோதிடக்கலைஞருமான கருணா கரம்பிள்ளை ரவீந்திரன் முதல்பிரதியை தனது குடும்பத்தார் சகிதம் மூத்தஎழுத்தாளர் இரா.கிருஷ் ணபிள்ளையிடம் வழங்கிவைத்தார். பதிலுக்கு அவர் எழுதிய 'கசப்பும் ஒருநாள் இனித்திடும்' என்ற நாவல் நூலை ஆசிரியர் க.ரவீந்திரனிடம் கைய ளித்தார்.



# மட்டக்குளிப் பகுதியில் கரை ஒதுங்கிய எல்லை வீரரின் சடலத்தினால் பரபரப்பு

## மனைவி, ஆறு இராணுவத்தினர் விசாரணையில்!

கொழும்பு.செப்.15

கொழும்பு, மட்டக்குளி - காக்கை தீவுக் கடற்கரை யில், முகம் துணியொன்றினால் சுற்றப்பட்ட நிலையி லும் கை, கால்கள் கயிற்றினால் கட்டப்பட்ட நிலையி லும் கரையொதுங்கிய சடலம் தொடர்பில் பல திடுக்கி டும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேலும் இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசேட விசாரணைகளில், இராணுவ புலனாய்வுப் பிரிவின் கோப்ரல் உள்ளிட்ட 6 இராணுவத்தினரும் மட்டக்குளி பிரதேசத்தின் கிராம சேவையாளரான பெண்ணொரு வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு வடக்கு குற்ற விசாரணைப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நபர், தற்போது கைது செய்யப்பட்டுள்ள கிராமசேவையாளரின் கணவர் எனவும், அவர் 40 வயதுடைய எல்லை வீரர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்குளி இராணுவ முகாமில் கடமையாற்றிய, புலனாய்வுப் பிரிவின் கோப் ரல் உள்ளிட்ட 6 பேரை இராணுவ பொலிஸ் பிரிவு கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காகப் பொலி ஸாரிடம் ஒப்படைத்திருந்து. இந்நிலையில் பொலிஸார் பெண் கிராம சேவகரைக் கைது செய்திருந்தனர்.

நேற்று முன்தினம் இந்தப் பெண் கிராம சேவையா ளரையும், இராணுவப் புலனாய்வுக் கோப்ரலையும் மட்டும் கொழும்பு பிரதன நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல முன்னிலையில் ஆஜர் செய்த பொலிஸார், அவர்களை 7 நாள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி பெற்றுக்கொண்டுள்ளனர்.

ஏனைய 5 இராணுவத்தினரும் நேற்று முன்தினம் மாலை வரை மன்றில் ஆஜர் செய்யப்படாத போதும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வும் அவர்களை நேற்று மன்றில் ஆஜர் செய்ய நடவ டிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

# 'நமக்கென்றொரு பெட்டகம்' அறிமுகமும் கலந்துரையாடலும்

ஈழத்து நூல்களின் பதிப்புகள் குறித்தும் பரவுகை குறித்தும் முதன்மையான அக்கறையுடன் செயற்பட்டு வரும் 'எங்கட புத்தகங்கள்' வெளியீடாக இவ்வாண்டு வெளிவந்த நூலியலாளர் என். செல்வராஜா அவர்களது 'நமக்கென்றொரு பெட்டகம்' என்கிற நூல் பற்றிய அறி முகத்தின் தொடர்ச்சியாக கிராமிய நூலகங்களின் சம காலத் தேவைகள் பற்றிய உரையாடல்கள் குறித்து




விதை குழுமம் தனது 'அறிமுகமும் உரையாட லும்' என்கிற தொடர் நிகழ்வின் மூன்றாவது அங்கமாக ஒருங்கி ணைத்த இணைய வெளிக் கலந்துரையா டல் 12.09.2021 அன்று நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகத் தின் பதில் நூலகர் கலா நிதி திருமதி. கல்பனா சந்திரசேகர், விதை குழும செயற்பாட்டாளர் அருண்மொழிவர்மன் ஆகியோர் மேற்குறித்த புத்த கம் பற்றிய தங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்துகொண் டனர். புத்தகத்தின் ஆசிரியரும் நூலியலாளருமான திரு. என். செல்வராஜா அவர்கள் கிராமிய நூலகங்க ளும் அவற்றின் சமகாலத் தேவைகளும் என்ற தலைப் பில் உரையாற்றினார். நிகழ்வினை விதைகுழும செயற்பாட்டாளர் கிரிசாந்த் ஒருங்கிணைத்திருந்தார்.

இந்த உரைகளைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்து ரையாடல் கிராமங்களில் நூலகங்கள் பண்பாட்டு வெளி யாக இயங்க வேண்டியதன் அவசியம் குறித்து வலி யுறுத்துவதாக அமைந்தது. ஆக்கபூர்வமாகவும் நேர் மறைத்தன்மையான விமர்சன பூர்வமாகவும் அமைந்த இந்த உரையாடல் கிராமிய நூலகங்களை உருவாக்குவது மற்றும் கொண்டு நடாத்துவதில் இருக் கக்கூடிய சவால்கள், அவற்றை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள், பொறிமுறைகள் என்பன பற்றியதாக விரிந்து சென்றது.




# புத்தாக்க அரங்க இயக்க ஒழுங்கில் இணையவழி அரங்கக் கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந் தம் நடத்தும் இணையவழி அரங்கக் கதையாடல் நிகழ்வில் கதையாடல் 15 நிகழ்வு வரும் 19 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத் தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பண்டத்தரிப்பு பெண் கள் உயர்தரப்பாடசாலை ஆசிரியர் ந.குகபரன் ஈழத்தில் ஒல்லாந்தர் காலத் தில் தமிழ் நாடக முயற்சிகள் என் னும் விடயத்தில் கதையாடவுள் ளார் .

ஏற்புரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.கும ரன் வழங்கவுள்ளார்.

இவ் இணையவழி அரங்க கதை யாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர் களை சூம் செயலி இலக்கம் 64733 48261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத் துள்ளனர்.

# தமிழ் ஊடகத்துறையின் ........

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளை இன்றும் கூட பலர் பாராட்டி மகிழ்கின்றனர் அந்த நாள் ஞாபகத்தில். கலை, இலக்கிய, அரசியல், பயணக் கட்டுரைகள் மட்டு மல்லாது தினபதியின் அத்தாணி மண்டபத்தில் அரச கேசரியாக அமர்ந்திருந்து படிப்போருக்கு புத்துணர் வூட்டும் சொல்லாட்சி நடத்தியவர் சிவநாயகம்.

'இலக்கியச் செம்மல்' சிவநாயகம் ஒரு தலைசிறந்த எழுத்தாளர் மட்டுமல்லர், புகழ்பூத்த கவிஞரும் கூட. இவர் யாத்த அருமையான அழகு தமிழ் மரபுக் கவி தைகள் சிந்தாமணியின் முதற்பக்க முகப்புப் படங்க ளுக்கு மிகுந்த சுவை கொடுத்தன. அவற்றை தானே எழுதிவருகிறேன் என ஒருபோதும் அவர் வெளியே பறைசாற்றிக் கொண்டவரல்லர்.

ஒரு பத்திரிகையை வாசகர்கள் விரும்பி வாசிக்கத் தூண்டும் யுக்திகள் தெரிந்திருந்தவர். வாசகர் இதயங் களை ஊடுருவும் வகையில் சுவைபட எழுதும் நேர்த்தி அவரிடமிருந்தது. அதேவேளையில் இலக்கியத் தூய்மை, மொழித் தூய்மை என்பவற்றை மெய்யாகப் பேணுவதில் அவர் எப்போதுமே விட்டுக் கொடுத்த தில்லை. இனிய தமிழில் சிந்தாமல், சிதறாமல் கருத்துக் களை எடுத்துச் சொல்வதில் வெகு சமர்த்தராக விளங்கி யவர். எழுத்திலும், சொந்த வாழ்விலும் நேர்மையாள ராக, நாணயமானவராக நடந்து கொண்டவர். இருந்தா லும் பத்திரிகையாளருக்குரித்தான 'திமிர்' அவரிடம் அதி கமிருந்தது. 'ஓர்மம்', 'நெஞ்சுரம்' மிக்கவராகவும் விளங் கியவர். சிவநாயகத்தை ஒரு 'ராங்கிக்கார ஜென்றில் மன்' என நான் விவரித்தால் அவரை நன்கு அறிந்தவர் கள் மறுக்கமாட்டார்கள். அவரது ராங்கித்தனம் தினபதி, சிந்தாமணி, பின்னர் சூடாமணி பத்திரிகைகளில் பிரதி பலித்தன. அதுவே பல்லாயிரக்கணக்கான வாசகர் களை வரவேற்று வெகுவாக அவர் பக்கம் சாய்த்தது என்று கூடச் சொல்லலாம். அவரது எழுத்தின் வலிமை பரபரப்பை ஏற்படுத்தும் - அமோக வரவேற்பைக் கொடுக்கும். சிவநாயகத்தின் ஊடக ஆளுமைக்கு பலம் சேர்த்த ராங்கித்தனத்துக்கு மேலாக ஒரு ஆன்மீக எழுச்சியும் கூடவே இருந்தது. ஓய்வுக் காலத்தில் அவர் கொழும்பு ஸ்ரீ சத்தியசாயிபாபா நிலையத்தின் தலை வராக விளங்கி சாயி பக்தர்களுக்கு சேவையாற்றி வந்தவர். புட்டபர்த்தியுடன் அதீத இட்டம் காட்டி வந்த தீவிர சாயி பக்தர்.

(வளரும்....)

# ஐ.நா. ஆணையரின் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரித்தது இலங்கை அரசு

## இன்றைய அமர்வில் பீரிஸ் பதிலளித்துக் காட்டமான உரை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையார், நேற்றுமுன்தினம் 48 ஆவது கூட்டத் தொடரின் ஆரம்ப அமர்வில், இலங்கைக்கு எதிராக முன்வைத்த குற்றச் சாட்டுக்களை இலங்கை அரசு அடியோடு நிராகரித்துள்ளது.

ஐ.நா. தீர்மானத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு வெளிப்புற முன்முயற்சிகளுக் கான முன்மொழிவை நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ .எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மொழி மூல அறிக்கைக்கு இலங்கை அரசின் சார்பில் நேற்று பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீர்மானம் 46/1ஆல் நிறுவப்பட்ட எந்தவொரு வெளிப்புற முன்முயற்சிகளுக்கான முன்மொழிவை நாங்கள் நிராகரிக்கும் அதே நேரத்தில் சம்பந் தப்பட்ட விடயங்களில் உள்நாட்டு செயன்முறைகள் கையாளப்படுகின்றன. தீர்மானம் 30/1 இனால் நாங்கள் அனுபவித்தபடி இது எமது சமூகத்தைத் துருவப்படுத்திவிடும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை அதன் ஸ்தாபகக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பு இல்லாமல் தொடங்கப்பட்டவெளிப்புறமுயற்சிகளால் அந்த நாட்டினால் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்துகொள்ள முடியாது என்பதுடன் அது அரசியல் மயமாக்கலுக்கு உட்படுத்தப்படும் - என்றார்.

# ஐ.நாவை ஏமாற்றலாம் என இனியும் கனவு காணாதீர்!

## இலங்கை அரசுக்கு சம்பந்தன் எச்சரிக்கை

பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஐ.நாவையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று இலங்கை அரசு இனியும் எண்ணக்கூடாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை அரசை சர்வதேசக் கண்காணிப்புப் பொறிக்குள் சிக்கவைத்துக் கடும் அழுத்தங்களைக் கொடுத்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் மிச்செல் பச்சலெட் அம் மையாரின் வாய்மூல அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை அரசு ஒருபோதும் தப்ப முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. தீர்மானத்தின் பரிந் துரைகளையும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையாரின் கோரிக்கைகளையும் இலங்கை அரசு நிறைவேற்றியே தீர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

# ஊரடங்குச் சட்டத்தை மேலும் நீடிக்கும் சாத்தியம் இல்லை

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி தெரிவிப்பு

நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண் டோபுள்ளே தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நான்கு வாரங்களாக நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட தன் காரணமாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

அடுத்த வாரம் முதல் நாட்டை மட்டுப்படுத்தப்பட்ட திறந்து பொருளாதாரத்தை வலுப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தடுப்பூசி வழங்கல் மற்றும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

### வவுனியாவில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன்தொடர்புகளைப்பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 91 பேருக்கு மேலும்தொற்றுஉறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

### அ,புரம் சிறைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னர் அவரை கைதுசெய்ய வலியுறுத்தியுள்ள சுமந்திரன் எம்.பி., அதுவரை இராஜாங்க அமைச்சரைப் பதவியில் இருந்து நீக்குமாறும் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் மிகவும் அராஜகமானது. எனவே, இந்த சம்பவத்துக்குப் பொறுப்பேற்று இராஜாங்க அமைச்சர் உடனடியாகப் பதவி துறக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இன, மத பேதமின்றி அனைவரும் தொற்றிலிருந்து மீள வேண்டும்!

## இதுவே எனது பிரார்த்தனை என்று யாழில் ஞானசார தேரர் தெரிவிப்பு

(நலோகதயாளன், இ.கலையமுதன்)

இன, மத வேறுபாடு இன்றி அனைவரும் கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட வேண்டியே யாழ்ப்பாணத்தில் சிறப்பு பூஜை வழிபாட்டை மேற்கொண்டோம்.

-இவ்வாறு பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாடு கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட வேண்டி நேற்று நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் ஒரு விசேட பூஜை வழிபாட்டில் கலந்துகொள்வதற் காக வந்திருக்கின்றோம். யாழ்ப் பாணத்தில் உள்ள சிறப்பான விஷ்ணு ஆலயத்தைத் தெரிவுசெய்து நயினாதீவு விகாராதிபதி மற்றும் யாழ்ப்பாணம் நாக விகாரை விகாராதிபதியுடன் இணைந்து வந்திருக்கின்றேன்

நாங்கள் ஒரு எதிர்பார்ப்போடு இங்கு வந்திருக்கின்றோம். தற்போதையநிலைமை அனைவருக்கும் தெரிந்த விடயம். இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் நோய் தாக்கத்தின் காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சிலர் நோயால் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகின்றார்கள். அது சிங்களவராக இருக்கட்டும் தமிழராக இருக்கட்டும். எந்த இனத்தவராயினும் அனைத்து இனத்தைச் சேர்ந்தவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சிலர் ஒரு நேர உணவுக்குக் கூட வழியில்லாமல் உள்ளார்கள். அதேபோல் சிலருக்கு வேலை இல்லாத பிரச்சினை காணப்படுகின்றது. அத்தோடு இந்த நோய்த் தொற்றுக்கு உள்ளானோர் சிகிச்சை பெறுவதற்கு அவதிப்படுகின்றார்கள். எந்த இனத்தவராக இருந்தாலும் பிரச்சினையில்லை. அனைத்து இன மக்களும் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள்.

கடவுள் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக குறிப்பாக பௌத்த மதத்தில் நாம் பின்பற்றும் ஒரு விதிமுறையைப் போல் இந்து மதத்தில் உள்ள ஆகம விதிமுறையை இணைத்து இந்தத் தொற்றில்



இருந்து நாடு விடுபட கடவுளிடம் வேண்டி ஒரு விசேட பிரார்த்தனை மேற்கொண்டுள்ளோம்.

தற்போது பௌத்த, இந்து, இஸ்லாம் என்ற பேதத்தை மறந்து அனைவரும் இணைந்து இந்தக் கொரோனா நோயிலிருந்து விடுபடுவதற்காக ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

இலங்கையில் நான்கு பிரதான விஷ்ணு ஆலயங்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்றுதான் இங்கு யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள். விஷ்ணு ஆலயத்தில் இந்த விசேட பூஜை வழிபாட்டை மேற்கொண்டுள்ளோம். கடவுளிடம் மன்றாடி இந்த விசேட பூஜை வழிபாடு மேற்கொண்டுள்ளோம்.

ஏனைய இடங்களிலும் இந்தப் பூஜை வழிபாடுகள் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு என்னுடன் இணைந்து ஏனைய விகாராதிபதிகளும் இந்த நிகழ்வில் இணைந்திருந்தார்கள்.

இந்தக் கொரோனா நோயின் தாக்கமானது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய அனைத்து விடயங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கையில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது

அதிலிருந்து விடுபடுவதற்கு நாம் ஒரு முயற்சியாகவே இந்த விசேட பூஜை வழிபாட்டை ஏற்பாடு செய்துள்ளோம். அதாவது உலகத்தில் உள்ள மக்கள் இந்த நோயிலிருந்து விடுபட வேண்டும் மக்கள் துன்பத்தில் இருந்து விடுபட வேண்டும் என்று வேண்டியே பூஜை வழிபாட்டை ஏற்பாடு செய்துள்ளோம்.

இன, மத வேறுபாடு இன்றி அனைத்து மக்களும் நோயிலிருந்து விடுபட வேண்டியே நேற்று இந்த வழிபாட்டை மேற்கொண்டுள்ளோம். குறித்த வழிபாட்டின் மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என நம்புகின்றோம் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். பல்கலையின் 35 ஆவது பட்டமளிப்பு நிகழ்வை வரும் 07,08,09 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு முடிவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 07ஆம், 08 ஆம், 09 ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. நாட்டில் இப்போதுள்ள கொரோனா - தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீடிக்குமாயின், சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அதனை நிகழ்நிலையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், தற்போதைய நிலைமைகள் வழமைக்குத் திரும்பிய பின்னர் பிறிதொரு நாளில் சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழாவை நடாத்தி மாணவர்களுக்குப் பதக்கங்களைப் பெற்றோர் முன்னிலையில் அணிவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களின் ஊடாக மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு ஒன்று நேற்று செவ்வாய்க் கிழமை காலை, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் இடம்பெற்றது. இந்த ஊடகச் சந்திப்பின் போது பட்டமளிக்கு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர் மேற்கொண்ட ஊடக விவரிப்பின் போதே இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

இந்த ஊடகச் சந்திப்பின் போது பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர், பட்டமளிப்பு விழா நிகழ்வு முகாமைத்துவ தலைவரும், தொழில்நுட்ப பீடாதிபதியுமான பேராசிரியர் திருமதி சிவமதி சிவச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஊடகச் சந்திப்பின் போது வெளியிடப்பட்ட ஊடக விபரிப்பின் முழு விவரமும் வருமாறு:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 07ஆம், 08 ஆம், 09 ஆந் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இந்தப் பட்டமளிப்பு விழாவை செப்டெம்பர் மாதம் 16,17,18 ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் நாட்டில் தற்போது நிலவும் கொரோனாப் பெருந்தொற்றுச் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு திட்டமிட்டபடி நடத்த முடியாமையினால் ஒக்ரோபர் மாதம் 07,08,09 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், வணிக முகாமைத்துவ பீடம், மருத்துவ பீடம், மற்றும் வவுனியா வளாகத்தை (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகத்தை)ச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 210 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 1, 455 உள்வாரி மாணவர்களுக்கும், 62 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 210 பேர் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை ஒருவரும், முது தத்துவ மாணிப் பட்டத்தை 08 பேரும், சைவ சித்தாந்தத்தில் முதுதத்துவமாணிப் பட்டத்தை 26 பேரும், சுற்றுச் சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தை 14 பேரும், கல்வி முதுமாணிப் பட்டத்தை 101 பேரும், வியாபாரா நிருவாக முதுமாணிப் பட்டத்தை 47 பேரும், முகாமைத்துவத்தில் பட்டப் பின் டிப்ளோமா தகைமையை 02 பேரும், நூலக மற்றும் தகவல் விஞ்ஞான பட்டப் பின் டிப்ளோமா தகைமையை 11 பேரும் பெறவிருக்கின்றனர்.

உள்வாரியாக, மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 131 பேர் மருத்துவமாணி, சத்திர சிகிச்சை மாணி பட்டத்தையும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 173 பேர் விஞ்ஞான மாணி (பொது) பட்டத்தையும் பெறவுள்ளனர்.

இவர்களுடன் கலைப்பீடத்தில் இருந்து சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை 302 பேரும், விசேட கலைமாணிப் பட்டத்தை 02 பேரும், பொதுக் கலைமாணிப் பட்டத்தை 04 பேரும், மொழிபெயர்ப்புக் கற்கையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை 15 பேரும், நுண்கலைமாணி (நடனம் - பரதம்) பட்டத்தை 63 பேரும், சட்டமாணிப் பட்டத்தை 52 பேரும் பெறவிருக்கின்றனர்.

அத்துடன், வணிக முகாமைத்துவ பீடத்தில் இருந்து வியாபார நிருவாக மாணி (சிறப்பு) பட்டத்தை 246 பேரும், வியாபார நிருவாக மாணிப் பட்டத்தை 08 பேரும், வியாபார நிருவாக மாணி (பொது) பட்டத்தை 12 பேரும், வணிகமாணி (சிறப்பு) பட்டத்தை 65 பேரும், வணிகமாணி (பொது) பட்டத்தை 05 பேரும், வணிக மாணி பட்டத்தை 02 பேரும் பெறவிருக்கின்றனர்.

விவசாய பீடத்தைச் சேர்ந்த 65 பேர் விவசாய விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 55 பேர் பொறியியல் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தையும் பெறவுள்ளனர்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 27 பேர் தகவல், தொடர்பாடல் தொழில் நுட்ப விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தையும், 06 பேர் சுற்றுச்சூழலியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், 06 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், 41 பேர் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (பொது) பட்டத்தையும், 23 பேர் கணினி மற்றும் பிரயோக கணிதத்தில் விஞ்ஞானமாணி (பொது) பட்டத்தையும், 13 பேர் சுற்றுச் சூழலியல் விஞ்ஞானமாணி (பொது) பட்டத்தையும் பெறவிருக்கின்றனர். மேலும், வவுனியா வளாகத்தின் வியாபார கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 34 பேர் திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தையும், 80 பேர் வியாபார முகாமைத்துவ மாணி (சிறப்பு) பட்டத்தையும், 25 பேர் வியாபார முகாமைத்துவமாணி (பொது) பட்டத்தையும் பெறவுள்ளனர்.

இவர்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தைச் சேர்ந்த 62 பேரின் வியாபார முகாமைத்துவமாணி (பொது) பட்டங்களும் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந் தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக, சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள்,அறிவுறுத்தல்கள் கட்டாயமாகப் பின்பற்றப்படும். பட்டமளிப்பு விழா அரங்குக்கு வெளியிலும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதோடு, இயலுமானவரை தேவையற்ற முறையில் கூட்டம் கூடுவதைத் தவிர்த்து - சமூக இடைவெளியைப் பேணுவதன் மூலம் இந்த நிகழ்வு வெற்றிகரமாக நிறைவு பெறுவதற்கு பல்கலைக்கழக சமூகம் அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றது.

### நிகழ்நிலை பட்டமளிப்பு / Virtual Convocation

நாட்டில் இப்போதுள்ள கொரோனா - தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீடிக்குமாயின் மாணவர்களின் நலன் கருதி, அவர்களின் பட்டங்களை உறுதிப்படுத்துவதற்காகப் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் (Virtual) நடாத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பட்டமளிப்பு விழாவை நேரடியாக - மாணவர்களின் பெற்றோர் முன்னிலையில் வழமை போன்று நடாத்துவதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

அனுமதி கிடைக்கும் பட்சத்தில் வழமை போன்று பட்டமளிப்பு விழா இடம்பெறும். இவ்வருடம் பெப்ரவரி மாதம் இடம்பெற்ற பகுதி ஒன்றைப் போன்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடாத்துவதற்கு அனுமதிக்கப்படுமாயின், பட்டம் மாணவர்களுடன் மாத்திரம் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பட்டமளிப்பு விழா இடம்பெறும். பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுகின்ற மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம். மாணவர்கள் தவிர்ந்த வேறெவரும் விழா மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

சுகாதாரத் துறையினரின் அனுமதி கிடைக்காத விடத்து நிகழ்நிலைப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஒக்ரோபர் 07 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும். நிகழ்நிலை நிகழ்வுகள் அனைத்தும் எமது பல்கலைக்கழகத்தின் இணையத்தளம் வாயிலாகவும், முகப் புத்தகம், யூரியூப் சனல்களின் ஊடாகவும் நேரலையாக ஒளி பரப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு / Ceremonal Convocation

மாணவர்களுக்குப் பட்டங்களை உறுதிப்படுத்துவதற்காகவே பட்டமளிப்பு விழா நிகழ்நிலையில் நடாத்தப்படுகிறது.

தற்போதைய நிலைமைகள் வழமைக்குத் திரும்பிய பின்னர் பிறிதொரு நாளில் சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழாவை நடாத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய நாளில் மாணவர்களுக்கு சம்பிரதாயபூர்வமாக வழமையான ஏற்பாடுகளுடன் பெற்றோர் முன்னிலையில் பதக்கம் அணிவிக்கப்படும்.

# சர்வதேசக் கட்டுப்பாட்டுக்குள் இலங்கை அரசை கொண்டுவர ஐ.நா. ஆணையர் முயன்றிருக்கிறார்

## நீதியரசர் விக்னேஸ்வரன் கருத்து

சர்வதேசக் கட்டுப்பாட்டுக்குள் இலங்கை அரசாங்கத்தை கொண்டுவர ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரிவித்திருக்கிறார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

தாம் அனுப்பும் வாராந்தக் கேள்வி - பதில் அறிக்கையிலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

**கேள்வி:-** ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர் ஸ்தானிகர் தமது அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதனை எப்படிப் பார்க்கின்றீர்கள்?

**பதில்:-** தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் பற்றி அவர் குறிப்பிடவில்லை என்பது மனவருத்தத்தைத் தருகின்றது. உதாரணத்திற்குஎமதுகாணிகளை அரசாங்கம் தந்திரமாகவும் பலாத்காரமாகவும் கையேற்றல் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒருவேளை பல உண்மையான தரவுகளை விவரமாக அவர் எதிர்பார்த்திருக்கின்றாரோ நான் அறியேன். அடுத்த மார்ச் மாதக் கூட்டத்திற்கு முன்னர் இவை பற்றி முழு விவரங்களை நாம் சேகரித்து அனுப்ப வேண்டும். எனினும் பல முக்கிய விடயங்களை அவர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவதாக மக்களை வேவு பார்ப்பது அவர்களை அச்சுறுத்துவது மற்றும் மனித உரிமை மீறல் செயற்பாட்டாளர்களை, பத்திரிகையாளர்களை, காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினரைக் குறிவைத்து அவர்களை நீதிமன்றில் நிறுத்துவது போன்ற செயற்பாடுகள் தற்போது விரிவடைந்து மாணவர்களை, கல்வியாளர்களை, மருத்துவர்களை ஏன் மதத் தலைவர்களையும் அரசாங்கம் கண்காணிக்கத் தொடங்கியுள்ளது என்பதைக் கூறியுள்ளார்.

இரண்டாவதாக நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் பற்றிப் பேசினால் போதாது, நடைமுறையில் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்றுள்ளார்.

மூன்றாவதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளை உடனே தற்காலிகமாகவேனும் செயலிழக்க வைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

நான்காவதாக 2019 ஆண்டு ஈஸ்டர் ஞாயிறில் நடந்த குற்றங்கள் சம்பந்தமான சூத்திரதாரிகளை உடனே கண்டுபிடித்து உண்மையையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டும் என்றுள்ளார். இப்படி பல விடயங்களை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று பொருள்படக் கூறியுள்ளார்.

மேலும் அரசாங்கத்திற்கு சார்பாகவும் பேசி, தொடர்ந்து பொறுப்புக்கூறல் விடயத்தில் அவசியமான செயற்பாடுகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மேலும் பொறுப்புக்கூறல் சம்பந்தமான விசாரணைகளை உடனே நடத்த உரிய குழுவை அமைப்பதாகவும் அதற்கான நிதிகளை அங்கத்துவ நாடுகள் பெற்றுத்தரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மொத்தத்தில் நாம் எதிர்பார்த்த பல விடயங்கள் கூறப்படாமல் விட்டாலும் தற்போதைக்கு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளார். அரசாங்கமும் வேறு வழியின்றி அதற்கு இசைந்துள்ளது. பணம்தான் பிரச்சினை. அத்துடன் நாம் நடப்பவை பற்றிய உண்மை விவரங்களைப் பட்டியலிட்டு அவருக்கு அனுப்பக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.09.2021 இல் வெளியிடப்பெற்றது.